உ.

சிவமயம்.

அறுபத்துமூன்று நாயன்மார்களில்

ஒருவராகிய

# திருநாளைப்போவார்

என்னும்

## நந்தனார்சரித்திரக் கீர்த்தனையும்

சிதம்பரக்கும்மியும்

இஃது

கோகுலபுரம்


அருணாசல முதலியாரால்

பரிசோதித்து

PRINTED BY
T·RUTHNAMOODEILLIR, ATTHE
*Kalay gyanapress.*
NO-6-MUDDUKRISTEN STREET
MADRAS.

1884





11578
2048
784.0954

திருச்சிற்றம்பலம்

# கதையின் வரலாறு.

திருவெண்ணீறுதரித்தபரமசிவனார் திருக்கொலுவீற்றிருக்கும்வெள்ளிமலையானது இமயமலையின்பக்கத்திலிருக்கின்றது அது பெரியோர்களுடைய பரிசுத்தமனம்போலவும், பழக்கம்போலும் பலவுலகிற் புண்ணியங்களெல்லாந்திரண்டிருண்டொருவடிவமாகப்பிரகாசிக்கின்றது-அதில் இருக்கு-யசுர்-சாமம்-அதர்வணம்-என்னும்-நான்குவேதங்களினோசையும், வித்தியாதரர்கள்வீணையோசையும்யானைகளுடையமுழக்கமும்காளைதுந்துபிமுழக்கமும்இடைவிடாதிருக்கின்றன அன்றியும்தேவர்கள் விமானங்களும் கற்பகமாலைகளும் பலமுனிவர்கள்அஞ்சலிசெய்து சார்த்துமலர்மாலைகளும்அம்மலைப்பக்கங்களெங்கும்நெருங்கியிருக்கின்றன அது அமரர்-சித்தர் - அசுரர் தைத்தியர்-கருடர்-கின்னரர்-கிருதர்-கிம்புருடர்-காந்தருவர்-இயக்கர் விஞ்சையர்-பூதர்-பைசாசர்-அந்தரர்-முனிவர்-உரகர்-ஆகாயவாசிகள்- போகபூமியர் என்னும்இப்பதினெண்-கணங்களுக்குங்கட்டத்தக்கது அக்கயிலாயமலையின்மேல்கோடாகோடிசூரியப்பிரகாசம்போலும்விளங்குகின்ற நவமணிகள் பதிக்கப்பட்டதிருக்கோயிலுக்குமுதற்கோபுரவாயிற்காவற்றலைவர்நந்திதேவர் அவர்பரமசிவன்திருப்பணிவிடைகளுக்குந்திருக்கொலுவிற்கும் அதிகாரத்தலைவர் அவருடையவர்களுந்திருப்பிரம்பும்பெற்றுக்கைலையைக் காக்கப்பட்டவர்தேவர்முதலானயாவருக்கு மேலானவர்பரமசிவனிடத்து அதிக பத்தியும்அன்புமுடையவர் இவரால்இரவும்பகலும்இடைவிடாமல் காக்கப்பட்டவெள்ளிமலையென்னுங்கைலாயத்தின் அடிவாரத்தில் எச்சமயங்களினுஞ்சிரேஷ்டசமயம் சைவசமயமென்றும்எக்கடவுளினும் பரமசிவனேமெய்க்கடவுளென்றும் அறிந்தவர் உபமன்னியமகாமுனிவர் இவர் கிருஷ்ணனுடையதலையின்மேல்தம்முடையதிருவடிகளைச்சூட்டினவர்இறப்பற்றிருக்கின்றவர்சிவனுடையதிருவையால் திருப்பாற்கடலைக்குடித்தவர் சிவனிடத்திடைவிடாதன்புள்ளவர்

இந்தஉபமன்னியமகாமுனிவர்தம்மிடத்தில்அடியார்களும்பெரியோர்களும்முனிவர்களும் புடைசூழ்ந்திருக்கின்றசமயத்திலொருவிடத்தில் ஆயிரஞ்சூரியகிரணங்கள் ஒன்றாகத்திரண்டாற்போலத்தோற்றும்பிரகாச[illegible] தோன்ற அங்கிருந்தவர்களெல்லோரும்உபமன்னியமகாமுனிவரைநோக்கி இஃதென்ன ஆச்சரியம் இப்படிப்பட்டபிரகாசந்தோன்றவேண்டிய காரணமென்னவென்றுகேட்க உபமன்னியர் மெய்ஞ்ஞானதிருஷ்டியாலறிந்துச்சொல்லுகிறார். தென்றிசையிற்றிருவாரூரிலவதரித்த சுந்தரமூர்த்திநாயனாரென்னுந்திருநாமம்பெற்றவர்சிவனதுதிருவருளாலெழுந்தருளினாரதுஇருகாரணத்தினாலே

குவித்து அத்திசைகளைப் போற்றி வந்தனஞ்செய்து ஆனந்தக் கண்ணீர மெய்குஞ்சித்தபடவன்னியா பேருக்குப்போதமற்றவர்கள்தங்களுக்குக் குல யசந்தேகம் தீரும்படி கேட்கத்தொடங்கினார்கள்

எங்களையாண்டவராகிய முனிவரே சிவனுடையதிருவடிகளை யல்லாம மற்றொருதெய்வத்தினடிகளையும்வணங்காமட்டு நேரிப்பொழுது வணங்க வேண்டியகாரணமென்னவென்று முனிவர்கள் கேட்க உபமன்னியர் சொல்லுகிறார் கேளுங்கள் பெரியோர்களே முனிவர்களே மற்றுமுள்ளவர்களே பரமசிவன் தரிக்கப் பட்ட திருமாலையும் திருவெண் ணீற்றினையும் அணிகின்றவர் எள்ளிட மில்லாது நிறையும், கொள்ளிடநதி சூழ்ந்த சோழ வளநாட்டி லிருக்கும் மேற்கா நாட்டில் ஆதனூரில் இண்டப்பாசதகர்குலத்தில்சேற்றில்செந்தாமரை புஷ்பித்தாற்போல னம்பக்தனொருவர் பிறந்தார் அவர் சிறுவர்களுக்கிட்டியும்வெட்டி வைத்தலைமையிய காவலியாட்டியும்பெண்பணிவிடைகள்மாட்டியும்சிவனடியாரைக் காணுற கவிகாட்டியுமிடைபகர் இவர் குலாசாரத்தன்மையும் நன்மையுஞ்செய்து மனமொன்றுமாறாச்சிவபூசைசெய்துசிவாலயங்களுக்குஅதையும்பேரிகைமத்தளங்களுக்குத்தோலும் வாருமியாழுக்கு நரம்பும்சுவாமிக்கு கோரோசனையும்முறையாகவும் இடையறாமலுங்கொடுத்துவருவார் சிவாலயத்தில் அக்கிரக்கிரித்போய்த்தூரத்திருந்துவணங்கித்திரும்பிச் சிவனைப்பாடியாடி வருகிறவரில் திருப்புன்கூரில்பரமசிவத்தைத்தரிசிக்க ஆதனூரிலிருந்து வந்து அத்திருக்கோவிலின் திருவாயலின் திருவாயிலினின்றுசிவலிங்க தெரிசனைகாண ஆவலாகவும்காவலாகவும் வணங்கிப்பாடுகையில் பரமசிவனார் சந்நிதிக்குமுன்னிருக்கும் நந்திகேசுரனைவிலகும்படிசெய்துகாட்டிகொடுத்தருளினார்.

நந்தனார்சுவாமிதெரிசனைசெய்து வரும்வழியில் ஒரு பள்ளத்தைக்கண்டு அதைப்பெருங்குளமாகவெட்டித் தம்முடைய ஆதனூரென்னுஞ் சேரிக்குப்போனார் இவ்வாறுபலதலங்களை வலஞ்செய்துகல்லுஞ்செய்து ஆத்திமலராகிய சிவனையேத்திச்சிதம்பரத்திற்குச்செல்ல,மனம்வந்து தம்முடையசாதிகோயிலுக்குப்போகயோக்கியமில்லையென்று விசனமடைந்துநாளைக்குப்போவேனென்றுசொல்லியிருந்தார் சிவபணிவிடையாலும் தன்னையடிமைகொண்டிருந்த வேதியருத்திரவின் நடையினாலும்போகக்கூடாமையால் அநேகநாள்சென்றும்நாளைப்போவேனென்றபடியால் அவருக்குத் திருநாளைப்போவாரென்றுபெயர்வந்தது அதன்பிறகுதிருநாளைப்போவார் - சிதம்பரம்சென்றபின் சுவாமி அவருக்குக்காட்சிதந்ததும் இதனடியில்வரும்கொண்டிச்சிந்தினால் தெரிந்துக்கொள்க.



உ

சிவமயம்

# திருநாளைப்போவாரென்னும்

## நந்தனார்சரித்திரக்கீர்த்தனை.

### கற்பகவிநாயகர் துதி

காப்பு-வெண்பா.

கந்தன்றனையளித்தகாதலனும்பேருபெற்ற
நந்தன்சரித்திரத்தைநானியம்பச்-சுந்தரஞ்சேர்
தில்லைமணிகோபுரத்திற் றேடிவளர்கற்பகத்தாள்
அல்லும்பகறுணையேயாம்.

### முக்குறுணிவிநாயகர்-துதி.

விருத்தம்

நந்தனைக்காத்தான்றில்லை நாயகனருளாலந்த
நந்தன்முககுறுணியான்றன் னளினபொற்றாள்வணங்கி
நந்தன்பேரருட்பாலுண்ட நற்புகழ்ச்சொல்லிப்பின்போரா
நந்தமுற்றுலகினோரும் நலமுடன்வாழ்குவேளே.

### சபாபதிதோத்திரம்.

கலிவிருத்தம்.

...ர்த்திகொள் நந்தன்சரித்திரக
...தையை யெடுத்தேவிளம்பிட

செக்கர்மேனியன் தில்லைச்சபைதனிற்
றக்கத்தோமெனுந் தாள்கள்சிரங்கொள்வாம்.

## சிவகாமிதோத்திரம்

விருத்தம்

பாம்பணைத்தந்தையாகப் படைத்தருப்பின்பெருங்காளைப்
பாம்பினைப்பணியாக்கொண்ட பரையருட்பாதமேத்திப்
பாம்பினிறபுலியும்பாம்பு பார்த்திடாநந்தனுற்கன்
பாம்படி முக்திதந்த வருங்கதைப்பகருவேனே.

## சுப்பிரமணியர் தெய்வயானை சரஸ்வதி இலக்குமி விஷ்ணு இவர்கள் துதி.

விருத்தம்.

சச்சிதாநந்தசதாசிவனைச்சார்ந்த நித்தியாநந்தன்
உச்சிதக்கதையைக் கீர்த்தனையாக வுலகெலாந்துதித்திடச்சொல்ல
அச்சிலைவேற்கையறுமுகன்தெய்வ யானைசெங்கலைமகள்கமலை
மச்சமாவன்மற்றும்பரவியதேவர் பாதபங்கயம்பணிகுவனே.

[illegible]-நாயன்மார்தில்லைமூவாயிரவரிவர்கள் துதி.

விருத்தம்

வாதவூரடியாரோடு மற்றறுபத்துமூவர்
பாதமேவணங்கித்தில்லைப் பதிதனிலாளுமேவும்
போதமூவாயிரத்தோர் பொன்னடிக்கமலமுன்னி
ஓதுநந்தன்சரித்திர முரைத்திடத்துணிந்தனமே.

## அவையடக்கம்

விருத்தம்

சித்திகள்காண்போர்சிக்கையுமூலக்கச்செப்புநல்லிலக்கணமுபகரத்திட்டும், விற்பனங்கண்டவறிவிலாவெனதுதாம்விதமெனமூதறிஞர்முனவரு, சொற்புகழ்கல் வித்துறையெலாந்தெரிந்த தூயநற்புலவர்முனகருதிப், பொற்புறவிசைக்குங்கீர்த்தனமிதனைபுவியிசைமதிப்பர்களம்மா

## விநாயகர் துதி.

தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி

கணநாதச்சரணம் காத்தரு
கணநாதசரணம்

அநுபல்லவி

பணமார்சேடன்முதலியோர்புகழினிலே — செருக்
குணமார்நந்தனைசரித்திரக்கூறக்கிருபைகண் — பாருவ(கண)

சரணங்கள்

சொல்லும்பாணகழுமலை தாயமேவுகாந்த — நாதா
தலங்குருமணிவர்மனத்துகளறுத்தருட் — போதா
நல்லமோதகமுதல் நாடிமுகள் — விநோதா
நாயேன்சொல்லுந்தமிழ் நாடகத்துக்கருந் — தாதா(கண)

அம்பரமானமன்று ளாடும்பர — னளிக்க
அனைகொடியிலில்லை மாதிமனம் — களிக்க
உம்பர்பிரானுகந்து வுயர்மாங்கனி — யளிக்க
உளந்தனராமனுண்டமுதல்லதுய — சொழிக்க(கண)

தேசோங்காரவரத்தச் சிகாமேலக்கோ — புரத்
தேவித்திருக்குமெங்கள்தேவாகுண்ட — வரத
பூசித்தவர்க்குவரம்புருந்தனிரு — மாதர
பூமிசைநாடகஞ்செய்யுந்தமே — மாகர(கண)

புராணவிருத்தம்

வளம்பெறுதருமமோங்கியவாத
னூரினில்வாழ்ந்திடும்புலையர்
உளமகிழ்ந்தெங்கள்குலப்பெயர்விளங்க
வுதித்தநற்றீபமேமணியே
களங்கிலாக்கதிரே யெனப்புகழ்ந்தோதக்
கதித்தசீர்நந்தனார்சரித்திரம்
விளம்பிடமுதலிற்றோடயம்பாடித்து
மேன்மையுமிகப்படித்தனனே.

தோடயம்.

இராகம்-நாட்டை-ஆதிதாளம்.

திருவளர் மருமாத — னார்-செதிநிலைக்குடிலைதாரர்
குமநெற்கந்தனார்ப் — போர்-சரித்திரமதனைச்சொல்லவே-ஆ-ஆ
குருவரசனுமுக- — சாமி-அம்பிகைதந்தருளுஞ்சாமி
ங்குசலகாதல — சாமி-அப்புயக்காளிக்குமீசனே. செய
டணிமாலைத் — தாரன்-மண்டலவாழ்த்திடிதீரன்
டுமெளியத்து — தாரன்-மன்றூங்கதைசொல்லவே-ஆ-ஆ

பண்டரீகபுரத் ஈசன்-புராரியுளமகிழ்நேசன்
தண்டலர்மாமணி வாசன்-தாமரைத்தாள்களிணையே-செய

## மங்களம்.

### விருத்தம்.

சங்கரன்றனக்குஞ்சண்முகன்றனக்குஞ்சதுர்முகப்பிரமனுர்தனக்கும்பங்கய
மாற்கும்வாமனையாட்கும்பார் சுட்பாலவர்தமக்கும்
நங்கிடவட்டவசுக்களானவற்குஞ்சதுர்மறையோர்களும்மந்தனர்க்கும்
பொங்கியமூவாயிரர்நந்தனுற்கும்பொதுப்படமங்களம்புகல்வாம்.

### தரு-இ-ம்-அசவேரி-அடதாளம்,

பல்லவி

ஆதிமத்தியாந்தனுக்குமங்களம் எங்கள்
ஆனந்தநந்தனார்க்கும்மங்களம்

அநுபல்லவி

பாதிமதியும்பாம்பும்புலி யுரியும்
சோதிக்குழையணியுந்துலங்கவருட் புரியும்

சரணங்கள்.

சிலைவைபவடிவழகிற்சிறந்தவொருபெண் ணுக்கி
சிலைவளைத்தபாசி-ராமன்செர்வத்தைப் போக்கி
மலைவைச்சுமந்துபெருமடிவிலொருநாத் தாக்கி
நாடகங்கள்செய்தமாயமாணினை யொப்த (ஆதி)

குருபரகுதருக்குங்குறமகட்பாக ருக்கும்
அருணகிரிநாதனுக்குமருள்செய்விசாக ருக்கும்
ஒருமுருகாவெனவுளங்களித்தவ ருக்கும்
உம்பர்கோனுக்கந்தவுயர்சிலைத் தந்த (ஆதி)
சக்கரைமுக்கனியவல்தனைநுகர் நாதற்கும்
சகலதேவர்தமக்குஞ்சகலவுகுக்க ளுக்கும்
பக்துவமாகவிதைபாடுஞ்சங்கீத ருக்கும்
பார்மகட்கும்பங்கயப்பாவையற்கும் விஜைய (ஆ

### பெரியபுராணச்செய்யுள்விருத்தம்.

திருமறையோர்புராணமவைபதின்மூன்றுசிவ
வேதியரானைவழிப்பட்டபுராணமீரண்டு
ருநாகமூன்மாமாத்திரரொன்றநுவர்முடிமன்னர்
குறுநிலமன்னவரைவர்வணிகர்குலத்தைவர்

திருமைமிகுசிவேளாளர்-பதின்மூவரிடையர்
இருமாசாலியர்குயவர்-தயிலவினையாளர்
பாதவர்சான்றாரென்றார்-இலைமறவர்நீசர்
பாணரிவரோ-டொருவராம்பகருங்காலே.

உபமன்னியபகவான்-சிஷிகளுக்குச்சொல்லிய-வசனம்.

இவ்வுலகில்பெரிதாகியவேதசாஸ்திரங்களுக்குள்ளே மிகவுஞ்சாரமாகியபரமசிவபத்தியையுண்டுபண்ணுகின்ற பத்திவிசாலத்தை உபமன்னியபகவானுவானவர் அநேகசிஷிகள்கேட்கச்சொல்லுகிறார் பெரியபுராணமென்றுசொல்லப்பட்ட நூல் சேக்கிழார் சுவாமிகளாலேசெய்யப்பட்ட நூல்காந்தபுராணத்திலும் இன்னமநேகபுராணங்களிலுஞ் சொல்லப்பட்ட பத்திமார்க்கமாகிய கடலிலேசீனாக்கையாலள்ளிக்குடித்தது போலச்சிலதுசிச்சுலைங்களிலும் விருத்தங்களிலும், சிவபத்தர்கள் சரித்திரங்களைக்கொண்டாடினதுபோல உளதினைமெய் அறிதப்பரம்கோபாலகிருஷ்ணையக்பெரியோர்அருளாலங்கி ஆனந்தம்பெருகிச்சொல்லிய திருநாளைப் போவார் சரித்திரத்தையாவரும்விளங்கிக்கேட்கும்படிசுலபமாய்ச்சிந்துவிசேஷ்,இவசாகசியம்-ஸ்காந்தம்-பாரதம்-பாகவதம்-பகவத்கீதை முதலாகியபத்திஞானவைராக்கிய சாஸ்திரங்களிலேமிகவுஞ்சாரமாகியபரமசிவபத்தியன்றுமல் இதரவேதபாராங்கதனுயிருக்கின்றபிராமணனைப்பார்க்கிலும் பரமசிவபத்தராகிய பதனியனுகிறவன் பறையனாயிருந்தாலும் பதினாலுலுலோகத்தையும் பரிசுத்தம்பண்ணுவானென்று உபமன்னியபகவான் சொல்ல அதற்குசிஷிகள்சொல்லுகிறார்கள் பத்திஞானவைராக்கியங்களைத் தெரியப்படுத்தாநின்ற வேதபுராணங்களைப்பார்க்க அறியாராம் அன்றியில்அவிவேகிகளாயிருக்கிறசண்டாளர்களுக்கு எப்படி பத்திவருமென்று சிஷிகள் கேட்க உபமன்னியபகவான்சொல்லுகிறார்

---

உபமன்னியபகவான்-சிஷிகளுக்குச்சொல்லுகிறார்.

நொண்டிச்சிந்து-இ-ம்-புன்னாகவராளி.

பழனமருங்கணையும்-புலைப்-பாடியதுகூறை,விடுகளில்-சுரைமேயா மாடாக்கிருக்கும் அனைச்-சுற்றிலும்நாய்களகுலைத்திருக்கும்-பறந்தோடிவட்டமிடும்,இளம்-பச்சைப்பிள்ளைதமேவிச்சைகொண்டுகோழிகூவுங்கூக்குரலும்பாழுக்-கொல்லைபுறங்களிலவெள்ளெலும்பும்-சாம்புகுவித்திருக்கும்,பறை-கெட்டி மிகந்திடும்-குட்டைகளிற்கள்ளோடுகுடியிருக்கும்,சிறுசத்தைகமடம் வதுக்கிருக்கும்-தோலுறுங்கேணிகளில், வெகு-தொல்லைப்படும் வாடை சொல்லியாப்பாரோ அடித்திருக்கும்,மயம்-பக்கங்களில்மெத்த செ

ச்செலும்பும்கிழித்தோல்நரம்புகளும், அவர்க் - கேமயில்கொசிறுமிதுவலரும்
தெருவில்விளையாடிக்கொண்டு, அவர் தெந்தினம்பாடுவார்கள்தாமா - மிதும்
பைமணியரையில்,கட்டி இரண்டுந்தலைகளில்பூண்டிருக்கும்சங்குரீதாடுகா
தளரியும்,அருந் - தாவடமேயவர் துவிடமாய்-மணிபோதரித்திருப்பார், தெ
ரு-வாசம்புறந்தனிலேசிக்கொண்டு- கொண்டாட்டமாயிருப்பார், கையைக்-
கொட்டிக்கொண்டு தனக்கிஷ்டமுடன்-மதுவுண்டுகெக்கலிப்பார்,பறை-வா
த்தியமும்-வெகுநேத்தியுடன்-இருக்குமபுலைப்பாடி,அதில்-ஈசன் திருவடி-
நேசமுடன்-தரித்தமெருபுலையர், அவர்-சாதிமுறைதனைமதவருதவராம்-நந்த
னாரவர்பெயராம்,வெகு-நல்லவராயிந்தத் தொல்லுலகில்-அவரேசிவனடியார்
அவர்க்-காருமெதிரில்லைதாரணியில்-கோடி கோடி ஜென்மங்களோ, முன்னே
ன்-குற்றமறச்செய்தகற்றவமோ-அலகாரமானதுவோ,ஈசன் - அன்புபுரியும்
பேரின்பசுகம்-கொள்ளை கொள்ளவேவாபிறந்தார்,திருக்-கோவில்வலஞ்சுமுன்
றுவலுடன்-செய்யும்பணிவிடை-கேள்-ஈசன் - சிந்தைமகிழ்ந்து குளிர்ந்திட-
வே-மத்தளபேரிகைக்கும்,இசை-வார்கொடுத்துப்புறந்தோல்கொடுத்து-ம
றவாமலேதினமும்,நல்ல,வாசமபெருகுங்கோரோசனையும்-தேவாலயங்கள்
தோறும், நந்த-சித்தமுருகியபத்திவெள்ளம்-பொங்கோடிக்கஞ்சுகளை, வி
ன்றுபேசமறியவொண்ணு துகண்டர்-சாதியில்நீசாவர்,பேணிச்-சருக்கிதோ
ழின்முறையாரும்புகல்-திருப்புன்கூர்ச்சென்றரனைக்,கண்டு-சேவித் திசை
பாடிப்பாவித்தபின்-தில்லைச்சிதம்பரத்தைக்-கண்டு-சேவிக்கவேண்டுமென்
றுவலுடன்-நாளைப்போவேனென்றாராம்,தன்னை-நாடும்பறையர்களோடிவ
ந்து-அண்ணே நீபோகாதே,நமக்காண்டை பொல்லாதவன் வேண்டிக்கொள்
ளான்-பாரப்பாசாதியுண்டே,என்ன-பாடுபடுமூழ்க்காடுமங்கே- நமக்குநீ
ருவாளோ,அந்த ருபருநன்பே என்னமாயிது வெண்டுதனைசெய்தார்
சிவன்-வேடிக்கைக்காரனென் அகாடிக்கொண்டே ஆரியாதுபோயிருந்தசெ
ம்பொன்-னம்பலத்தாடியையக்கும்பிடவே ஆதனூர்தனிலிருந்து,விடும்- அ
ம்புபோலப்பறந்தைதயபின்றித்-தில்லைபருகிலவந்தார்,மனங்- தேறிக்கொண்
டார்துறையாதிக்கொண்டார்-கெண்டாமணியோசை-காதில் -கேட்குதென்
றாரதைப்பார்க்கவென்றே-கொண்டாட்டமாகவந்தார்,கையைக் - குவித்துக்
கொண்டேதனக்கம் நட்டே தா-வென்றேமனமகிழ்ந்தார், தெரு-வீதியிலே
வந்துகாவலுடன்-கண்டார்களையாறி,இருகண்களிலாரைதப்பொங்கிடவே-
நின்றார்மதிற்புறத்தே,வெகு-நேத்திவென்றுரிலைப்பார்த்ததில்லை - பணிந்
தார்பரவசமாய்,நல்ல-பாக்கியசாலிகளாகுமென்றார்- இதுதானோ தில்லைப்பத
தி,என்று-எக்கலிக்காமடிக்-கெக்கலித்தார்-ஜயாவுன்சந்நிதியோ, நான்-ஆ
சைகொண்டுவந்தேனோசமுடன்-தெருவில்பொடித்துளி அள்ளித்-தேகமு
மூசிவைத்தாகமுடன்-தரித்தார்திருநீறுய்,நாலு-சாஸ்திரவேதங்கள்பார்த்து
ணரும்-பெரியோர்இருக்குமிடம்-இந்தப்-பேரிருப்பதுநாயமல்ல-நாமே

பறைச்சாதி, தில்லை-நாதன் தரிசனமாகாவாய்ப் பண்ணுப்படுபோவி, இந்தப் பாரிலிருப்பது சிரல்லவே என்றேகுளத்தோராம், புக்குளங்கின்றார் துயர் நீங்கின்றார்-நூயாப்பெருங்கவலை-கொண்டு - உள்ளங்குழைந்திட வெள்ளமெனக்-கண்ணீர்கள்பூரண, இருகைதொழுதாரவர் மெய்தொழுதார் - மீழேபுரண்டழுதார், ஒன்றுங்-கேள்விமுறையில்லையோ நாதா-வென்றே தலைகுனிந்தார், எந்தன்-வேதனையைக்கண்டு ஆதரிக்குந்-தெய்வங்கிடையாதோ தாபாவி-சித்தங்தெளியவிரத்தித்து-வாவென்றழைப்பாரோ, விண்ணில்- அமரர்கள்போற்றுமுனமிலாக்ஷணகசபைநடனம், கண்ணிற்-காட்டக்கிருத்திடாயடியேன்-வருகிறித்துதிப்பேனோ, எந்தன் வாணருருகுதவிண்ணையே அடைவதெந்நவென்று, உடர்- அந்நகர்வீதியைச்சுற்றிவந்தார் இரவும்பகலோயா, ரக்தசன்கண்டுவிசுவாசமுடன்-பாலகிருஷ்ணன்பணியும், திருப்-பாதமுள்ளதில்லைநாயகனே-கனவிலுருவாகி, வந்து-கடாட்சித்தபின் - எரியினிடைமூழ்கி, வெகு-இன்பம்பெரிய அன்பருடன்-வேதமுனிவடிவாய்த் தில்லை-வேதியர், வேதியர்கைதொழுதார், அங்கம்புளகிதமாய்ச், செம்பொனம்பலத்தாடியசம்பிரமத்தைக்-கண்டார் நீந்தில்லாசல்.

### கீர்த்தனம்-௯-ம்-எதுகுலகாம்போதி-சாப்புதாளம்.

பல்லவி.

நீசனாய்ப்பிறந்தாலும் போதும்
ஆசையுடனம்பலவாணனடியிலிருந் தாலும் (நீசனாய்ப)

சரணங்கள்

கோடிகோத்தவங்கள் புரிந்தாலும்-தங்கள்
குலவொழுக்கந்தவறாதநெறியி லிருந்தாலும்
வேதமுடிவாகுமுணர் தாலும்-மாயை
விலகாதொழுக்கினாலுமே யாது ஞானபம் (நீசனு)

களவுகொலைசெய்து வந்தாலும்-பதித
காரருடனெங்கேரங்கூடியிருந் தாலும்
வளமறவேவாழ்வுகெட் டாலும்-நல்ல
மனிதனவனிடமாகமறக்கப்பலு காது (நீசனு)

எத்தகருமங்கள்செய் தாலும்-எங்கு
மிடையாதகொடையாளியெனவிருந் தாலும்
கோத்திரகீர்த்தியிருந் தாலும்-எங்கள்
கோபாலகிருஷ்ணன்தொழும்பாதம் நினையாதோன் (நீசனு)

வசனம்.

இப்படிபக்திசெய்தால்போதும் மற்றசாதிவருணச்சிரமங்களிரு ந்தாலும்பிரயோசனமில்லை என்றும்ஒருஇதிகாசத்தைச்சொல்லுகிறார் பூர்வத்திலே தில்லைவெட்டியானென்றும்,சாம்பனென்றும், ஆதனார்கந்த சாம்பனென்கிறதிருநாளைப்போவானென்றும்பெயர்பெற்ற இம்மூன்றுபே ர்களும் திருச்சிற்றம்பலத்தை அடைந்தார்கள்,இம்மூன்றுபேர்களில் கந்த சாம்பனென்பவர் மாத்திரமில்லை மூவாயிரம்பேர்களும்பார்க்கச் சாயப்பி ரவேச மானாரென்றுசொல்லரிஷிகளெல்லாரும்ஆனந்தமடைந்து உபமன் னியமகாரிஷியைப் பிரதட்சணஞ்செய்து பாதவணங்கிஅஞ்சலிசெய்து ஐ யசுவாமி எல்லோரும்பார்த்திருக்கையில்முத்தியடைந்த திருநாளைப் போ வாரென்னும் பெயர்படைத்துப் பேறுபெற்ற சிவபக்தருடைய சரித்திரத் தைச்சொல்லுங்களென்று ரிஷிகள் பிரார்த்தித்துக்கேட்கும்போது உபம ன்னியமகாரிஷியானவர் மிகவுஞ்சந்தோஷமடைந்து ஈஸ்வரனுடையகுண ங்களை வர்ணிப்பதைப் பார்க்கிலும் ஈஸ்வர பக்தர்களுடைய குணங்களைச் சொல்லுகிறதமெத்தவும் புருஷார்த்தமென்று சொல்லத்தொடங்கினார்,சி தம்பரத்திற்கு நாளைப்போவேனென்றுசொல்லுவான் கந்தன் சொல்லிவந்தபடி யாக்கந்தனுக்குநாளைப்போவாரென்றுநாமதேயமுண்டாச்சு ஆதிலுமீஸ்வ ரனுடையகுணங்களைச்சொல்லுகிறதும் சொல்லலாம்பத்தர்களுடையகுண ங்களைச் சொல்லயாவர்க்குந்தெரியாதுதெரிந்தமட்டுஞ்சொல்லுவோமென் றுமயிர்சிலிர்த்து ஆனந்தக்கண்ணீர்வடித்து மனங்களித்துப்பரமசிவனை நி னைத்துமையால்துதித்து ஆத்துமா ஆத்துமிகமாயிருக்கின்ற நரகதிரியக் களினாலே வருத்தத்தையடைந்திருக்கின்றதென்று அதற்கு அமிர்த வருட்சி தம்போலே கந்தனுருடையபுண்ணியத்தால்அமிர்தத்தைவருஷிக்கத்தொ டங்கினார்.

கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்

பல்லவி.

கந்தன்-சரித்திர-மானந்தம்-ஆறுனு-மத்தி
யந்தம்-பக்திரச-கெந்தஞ்-சொல்லச்சொல்ல (கந்தன்)

கந்தன்-சரித்திரம்-வெகு-அந்தஞ்-சிவனுருக்குச்
சொந்தத்-தலையும்பவ-பந்தம்கேட்டபேர்க்கு (கந்தன்)

வந்து-இலனைப்போலே-சாது-பூமியிலிருக்
காது-அரிதுஇரு-காது-படைத்தபேர்க்கு (கந்தன்)

ஆடிமனதுருகிப் பாடி அரகரவென்
றாடிக்கனகசபை நாடிச் சேருவேனென்ற (நந்தன்)

அண்டர்கொண்டாடுஞ் சோழ மண்டலந்தன்னைச் சூழக்
கொண்டமேற்காநாட்டில் விண்டஆதனூரில்வாழ் (நந்தன்)

கீர்த்தனம்-இ-ம்-கமாசு-ஆதிதாளம்.

பல்லவி.

திருநாளைப்போவார்சரித்திரம்
தேனிலும்-பாலிலு மினியது கண்டீர் (திருநா)

சித்தமுருகிய சிவயோகிகளுக்
கர்த்தமிதுவென்-றனுதினப்பணியும் (திருநா)

மேதினிபுகழுமாதனூர்-விளங்கவந்த-மாதவஞ்சாதனை பெருகிய
பேதமில்லாதவன்வேதகுருபர-நாதனைப்பணியும் (திருநா)

மனதில்குற்றமில்லாதவன்நிந்தை-வஞ்சனை-பொய்கைசொல்லாதவன்
கனவிலும்நினைவிலும்-சிவபதம்குருபதம் (திருநா)

கருத்துணர்ந்தித்திடப் பெருந்திடவாசனும்
சாதிமுறைமைதவறுதவன்-பவ-சாகரத்தின்-முழுகாதவன் (திருநா)

பூதமாயாதிகளாகியவுலகம்
பொய்யிதுமெய்யிது-வல்லவென்றறிந்திடும் (திருநா)

பெரியபுராணச்செய்யுள்

விருத்தம்

பகர்ந்துலகுசீர்போற்றும் பழையவளம்பதியாகும்
திகழ்ந்தடைநற்கொள்ளிடம்பொன் செழுமணிகடிரைக்கரத்தால்
முகந்துதரவிருமருங்கு முளரிமலர்க்கையேற்கும்
அகன்பணைசேர் நன்னாட்டு மேற்கானாட்டாதனூர்.

வசனம்

கொள்ளிடத்துக்குச் சமீபமாகிய உலகமெல்லாம்புகழும்படிக் கீர்த்தி பெற்றிருக்கின்ற அமராபதி அளகாபுரியைப்பழித்தாற்கச்செய்யும் மாடமாளிகை கூடகோபுரத்தொடும் அணியாதிகள்வெள்ளாட்டிகள்வேலை செய்யும் செல்வத்தோடும் வேதவேதாந்த தத்துவஞானமறிந்த சாட்சாத் சாய்பெற்றவேதியரோடும் மற்றுமுள்ளவருணாச்சிரமங்களாலேசூழப்பட்டு

பூலோகத்திலதிகமென்றுசொல்லப்பட்ட ஆதனூரென்னுங்கிராமத்துக்கு வெளியில்நஞ்சைநிலங்களாலே சூழப்பட்டிருக்கின்ற கடைசாதியர்குடியிருக்குஞ்சேரியைக்கொண்டாடிச்சொல்லுவார்ஏனென்றால் ஸ்காந்தபுராணத்தில்அஞ்சுபோக கண்டத்திலேசிவபத்தன் குடியிருக்குஞ் சேரியைக் கைலாசமென்று வருணித்துச் சொன்னபடியால் உபமன்னியபகவான் மிகவுங்கொண்டாடிச் சொல்லுகிறார்.

சிந்து.

பழனமருங்கணையும்-புலைப்-பாடியதுகூரைவீடுதனில்-சுரையோபடர்ந்திருக்கும், அதைச்-சுற்றிலும் காய்கள்குலைத்திருக்கும் பாசிதொடிவட்டமிடும்-இளம்பச்சைப்பிள்ளைதமே விச்சைகொண்டுகோழிகூவும்கூக்குரலும், பாழுஞ்-சோலையருகினில் வெள்ளெலும்பும்-நரம்புங்குவித்திருக்கும் புலை-வெட்டியிருந்திடுங்குட்டைகளில்- கண்டோருடியிருக்கும், சிறு-நத்தைகமடம்வளர்த்திருக்கும்-தோலூறுங்கேணிகளில்வெகு-தொல்லைப்படும்வாடைசொல்லதியாப-பரம்போ அடித்திருக்கும், வயற்-பக்கங்களில் மெத்தகொக்கெலும்பும்-கிழித்தோல்நரம்புகளும், அவர்க்- கீலயில்லைசிறுமீனுண்ணும்-தெருவில்விளையாடிக்கொண்டு, அவர்- தெங்கினம்பாளைகொச்சனைமான் இளப்பைமணியணையில்...ட்டி-இணைச்சிலைகளில் புள்ளிருக்கும்-சங்கு தோகோதளிருமரக்கராமிட்டேப்பவர்- தாவிடமாய்-மணியோதரித்திருப்பார்-தெரு-வாசற்புறந்தனி லேசிக்கொண்டிக்கொண்டாட்டமாயிருப்பார்- கையைக்-கொட்டிக்கொண்டு தனக்கிஷ்டமுடன்-மனுவுண்டுகெக்கலிப்பார் பறை-வாத்தியமும்வெகுசேத்தியுடன் இருக்கும்புலைப்பாடி. அதில்-ஈசன் திருவடிநேசமுடன்-தரிக்கும்ஒருபுலையர்- அவர்-சாதிமுன்றமைதவ நயநம்-நந்தனாரவர்பெயராம்.

வசனம்.

இவ்விதமாய்க் கடையரிருப்பின்வாய்ப்பிலில் வாழ்வார்இப்படிவுடன் சிலங்கழற்கேயினைத்தவுணர்வோடுமந்தராபத்தி லூற்புலமையாண்டதொழிலனுமயத்திலொப்பிய சுத்தனொருவ ருண்டாயிருக்கும் புலைப்பாடியில்பரமசிவ பாதாரவிந்தத்தில் மிகுந்த அக்ராங்கம் பொருந்தினவராகியநந்தனார் மிக பத்தி புரிந்திருந்தார் வீச்சுடன் சேற்றில்விழுந்தாலும் பிள்ளைப்பூச்சிமேலேசேறொட்டாது அத்தன்மைபோல் எத்தனைகாரியமிருக்கினும் முத்தியளிக்கும்கர்த்தனாகிய அத்தனைதனையசுத்தமாகிய சித்தத்தில்வைத்தமும்மலைத்தாக்கத்தவபுத்தி பெற்றிருந்தார், மற்றதுமறந்தார்உற்றதுமுணர்

ந்தார். இப்படியெல்லாருமிருந்தும் நல்லதுமில்லையமற் போனதல்லாமகப் பொல்லாங்கு சொல்லுமல்லவோ.

சிந்து.

இவர்போல-நல்லவராமிக்கத்தொல்லுலகில்-ஆனபோதிலவரடியார்.

வசனம்.

என்று ஆச்சரியங்கொண்டு சொன்னபடியிருமே இவரைப்போலபத் திமார்க்கத்திலிருந்தவராயிருந்தவர் ஆரிருக்கிறார் ஆர் இருப்பாரென்று இ னைச்சொல்லப்போகாதனைகடந்தபாரயசிலபத்திமானென்று சொல்லப்படும்

சிந்து.

ஆக்கூர்-காருமேனிநீலத் தாரணியில்-கோடிகோடி செனங்களோ, மு ன்னை-குற்றமறச்செய்தக்கற்றவமே-அவதாரமானதுவோ ஈசன்-அன்புபுரியு மபேரின்பசுகங்கொண்டோ கொள்ளவோ பிறந்தார் திருக்கோயில்களுக்கு சமு க்குவதுடைய செய்யும் பணிவிடைகள்.

பெரியபுராணச்செய்யுள்.

விருத்தம்.

ஊரில்விடும் பறைத்துடைவையுணவுரிமையாக்கொண்டு
சார்பில்வருந்தொழில்செய்வார் தலைநின்றார் தொண்டினால்
கூரிலைமுக்குடுமிப்படையண்ணல்கோயில்தொறும்
பேரிகையேமுதலாயமுகக்கருவிபுறவினுக்கும்
போர்வைத்தோல்விசிவாரென்றினையனம்புகலுமிசை
நேர்வைத்தவீணைக்கும் யாழுக்கும்வீக்குவகைய
சேர்வுறதந்திரியுந்தேவர்பிரானர்ச்சனைக்குக்
காரவத்திருடன்கோரோசனையுமிவையுவித்துள்ளார்

வசனம்.

இந்தப்பிரகாரம் நந்தனார் செல்வத்தளங்கள் தோலும்போய்ச்சுவாமியைத் தோத்திரஞ்செய்கிற தெப்படியென்றால்.

தரு-இ-ம-காம்போதி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

செந்தாமரைமலர்சூழ்ந்தோடைகளுமேடையும்
செறிந்தமலர்க ளாட்டம்-சிறந்தவெளூர்
எந்தபிரானுக்கதி-நேசக்கோரோசனைமற்
றீர்தொழிந்தார்பள வாட்டம்
சைவாசவணமூர்த்தி ஞானசம்பந்தன்சொன்னத்
திருவவதார மாக-வந்தசீர்காழி

புவனசட்சகன் திரு-நீலகாயகிமையேத்திப்
பூரித்தார்வெகு வாக
ஒருபொற்புறமுமதி-ளொங்கிமாயூரத்
துவந்தவிஸ்வநா திசனை-மிகத்தொழுது
ஒருமுகக்கருவிகுத்-தோல்கரம்பிவைதந்தா
ருலகிற்புகழவுக்கள் பெயனை
உமையொருபாகத்திலுயர்பரமன்றரும
னெறுபசவுங்கள் ருக-மாடவேடன்
சமைத்துபயின்மனுநீச்சொழுன்றனக்குக்காட்சி
தந்தவாருச்செல்ருன் பா

வசனம்.

பின்னுமந்தனார் தாம் செய்யுந்தருமமே தென்றுல்நிலர்புலையாண்படியல்சிவஸ்தலங்களுக்குப் போய் வீதியைச்சுற்றிசந்நிதியில்வந்து தடி விழுந்ததுபோல உடல்பணிபப்பணிந்து புழுதியில் புரண்மயிர்சிலிர்ப்பக்கண்ணீருதிர்ப்பவாய்குளறி உளைதமோதிலொருதரமழுது ஒருகாற்றொழுது எக்களித்துக்கெக்கலித்து ஒருதரஞ்சிரித்து ஒருதரம்வெறுத்துசகமறந்து அகமகிழ்ந்து அனல்கண்ட மெழுகது போலுள்ளமுருகி ஆனந்தவெள்ளம்பெருகி கண்ணை கருதிச் சிவனே சிவனே யென்று வாய்வலிக்கப்பேசிகைவலிக்கக்கொட்டி கால்வலிக்கக்கூத்தாடி நிற்பவொருமுகமூர்த்தஞ்சித்திரத்திலெழுதும் பதுமைபோல் கண்ணிமையாமல் வாயசையாமல்கையசையாமல்காலெழாமல் வாயசையாமல் ஓசைதெரியாமல் அலையடித்தோய்ந்தகடல்போலநிறைந்து தன்னை மறந்திருப்பார் தன்னினைவுவந்து பரவசந்தெளிந்துசகனைப்பணிந்துகொண்டுவர்தபணிவிடைசெலுத்தக்கோவிலார் கேட்கக் கும்பிட்டுச் சொல்லுவார்

கீர்த்தனம்-இ-ம்-ஆனந்தபைரவி-ரூபகதாளம்

பல்லவி.

வாரிருக்குதுதோலிருக்குதுவாங்கிக்கொள்ளுவீரோ-மத்தளங்கள்
பேரிகைக்கும்வீணைக்கும் நல்லவிருக்கிக்கட்டும்வினை (வாரிருக்)

பெரிருக்குதுபோதுஞ்சிவந்-பெருமையைக்கொண்டாடிதினமுஞ்
சிறுமையின்றதில்லைப்பதியில்-சேருதற்குமாயத்தேட (வாரிருக்)

சிறியவனென்சாதியென்று மறியாதவனுனேனும
சிவபெருமானுக்கடியேன் செய்யும்பணிவிடையிது (வாரிருக்)

சிந்து.

செய்யும்பணிவிடைகள் - தசன் - சிந்தைமகிழ்ந்து ருசித்திடவே மத்தளம்பேரிகைக்கும் - இசை - வார்கொடுத்துப் புறம் தோல் கொடுத்து மற

த்துமநவாமலேஜின்றும்-கலை-வாசம்பெருகுங்கோரோசனையுந்தேவாலய
ங்கன்றோறும்-தந்து-சித்தமுருகியபத்திவெள்ளம், பொங்கோடிக்கருணை
என்று-பேதமறியவொன்றுகண்டார், சாதியில்கீசனவர்.

வசனம்

இப்படிபக்திசெய்யாநின்ற நந்தனாருடையவரலாறேதென்றால்.

கீர்த்தனம்-துக்கடா-ஆதிதாளம்.

ஆதனூர்சேரியொருவேதியர்க்குள்ளே அடிமைக்காரப்பறையன்
குதுலாதுமொன்றுந்தெரியாதவன் பரிசுத்தானபக்தன்
சோதிநாதங்கள்சாதியர்க்கும் சிவநாமங்களைமிகச்சொல்லி
காதலோடுதிருப்புன்கூரீசனைக்கண்டுவருவோமென்றார்

நந்தனார்சிவதரிசனஞ்செய்யவேண்டியதற்காக தங்கள்
சாதியாரைக்கூப்பிடுகிறார்

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ரூபகதாளம்

பல்லவி.

சிவலோகநாதனைக்கண்டு-சேவித்திடுவோம்வாரீர்

அநுபல்லவி

மலமயக்கங்களைப்போக்கிடுவார்
பரமபதத்தைக்கொடுப்பாரந்த (சிவலோக)

சரணங்கள்

அட்டக்கதைதனைத்தேடும் அகலன்திருவடிமறந்தோம்
கற்பிதமானபிரபஞ்சமீது காலஞ்சலம்போலேபெண்ணி (சிவலோக)
ஆசைகடலில்வீழ்ந்தோ மினியதிவுக்கதிவையிழந்தோம்
பாசங்களைவழிதேடாமல் பரதவிக்கும்பாவியானோம் (சிவலோக)
மாளிடச்சென்மங்கொடுத்தார் தன்னைவருந்தக்காக்கவைத்தார்
தேனும்பாலும்போலேசென்று தேரடியில்நின்றுக்கொண்டு (சிவலோக)

பெரியபுராணச்செய்யுள்-விருத்தம்

திருப்புன்கூர்ச்சிவலோகன் சேவடிகண்மிகநினைந்து
விருப்பினொடுந்தம்பணிகள் வேண்டுவன்செய்வதற்கே
அருத்திநின்றொருப்பட்டன் காதலார்தனின்றும்
வருத்தமுறாங்காதலினால்வந்தவ்வூர்மருங்கணைந்தார்.

வசனம்.

நந்தனாரிப்படிச்சிவலோகநாதனைச் சேவிப்போமென்றுவெகுசொனமாய்ச்
சொல்லிநிச்சயஞ்செய்தநந்தனாருக்குறும்பறையர்களுக்கு முண்டானவாக்கு
வாதம்

அவர்கள்-தவஞ்செய்யுஞ்-சடங்கிது-வல்லவோ-பறையர்கள்-செய்தால்- பா
வமேயென்றார்

நந்தன்-தேருந்திருநாளு மிருக்குது போவோம் வாரும்வாருமென்றுவருந்
தியுமையழைத்தார்

அவர்கள்-பொறும் பொறுமிதுபுண்ணியமல்ல ஏறிபோவோமென்றிவரை
யுமழைத்தார் சேரியைநீங்கிச் சிலதுபேர்வந்தார்

பதினெருபேர்கள்பண்புடன்வந்தார் நந்தன்மாரிபோல்ஞானமார்க்கம்பொ
ழிந்து தவமுனிபோலேதானங்கேநின்றார்

அவர்கள்-சிவலோகநாதனைச்சேவிப்போமென்றார் நந்தன்வெறுங்கையோ
டேபோகலாகாதென்று

வாருடன்தோலும வரிசையாய்க்கொண்டார் அவர்கள்சேரியிலுள்ளசிறிது
வென்றார்

நந்தன்-வந்தபூசையருக்குப் பத்திபெருகவே நெத்தியில்நீறிட்டார் அவர்சத்
யந்தானென்று மெத்தவுங்கும்பிட்டார்

கீர்த்தனம்-இ-ம்-வராளி-சாப்புதாளம்

இவர்-சிங்காரமான பன்றுபாடினார்
அவர்-அங்கங்குளிர்ந்து கொண்டாடினார்
இவர்-கோரோசனைப் பையையெடுத்தார்
அவர்-தாராளமாய்-வாரிக்கொடுத்தார்
இவர்-சிவமந்திரஞ் சொல்லிச்செபித்தார்
அவர்-தவமிஃதே யென்றாச்சரித்தார்
இவர்-ஆசைப்பெருங்கடல் தாண்டினார்
அவர்-ஓசைப்படாமலே வேண்டினார்
இவர்-அளவில்லாவானந்த மடைந்தார்
அவர்-அளவில்லக்காட்சி பெத்திருந்தார்
இவர்-திருப்புன்கூரீசனைப் பாடினார்
அவர்-விருப்பமோடிவனைக்கொண்டாடினார்

வசனம்.

இப்படிஎல்லோருங் கூடிச்சிவனை அடிக்கடி வணங்கிஅரகராவென்று
ரைத்திடுஞ்சத்தம்பரமனேயறிவார் இப்படிநந்தனார்பதினெருபேர் பறைய
ரோடேதிருப்புன்கூர்வந்துசேர்ந்தார்.

கலம்வந்துவீதிவலம் வந்துநன்கர்
சலம்வந்துசேரும் பலம்வந்துதெங்கர்

குலஞ்சுத்தமாச்சு மலம்விலக்குப்போச்சு
நலங்கொண்டோமென்று நிலைக்கொண்டுநின்றார்

வசனம்.

அந்தஸ்தலத்திலேநந்திமிகவும்பெரிதாயபடியினாலேலிங்கதரிசனஞ்செய்யக்கூடாமல் மறைந்திருப்பதால்நந்தனார் துயரமடைந்து சொல்லுகிறார்.

௬௫-இ-ம்-சங்கராபரணம்-ஏகதாளம்

கண்ணிகள்.

ஹரசங்கரதிரிபுராந்தகசிவசங்கரவெங்கள்
  அம்பிகையொரு பாகா எங்கும்
நிரந்தரமாயென்றுமென்னைப்போல விருந்து
  நினைப்பவர்க்கருள் போகா
வெள்விடைமேல்வரும் விமல நமசிவாய
  விளங்கும்வேத முடிவே நால்வர்க்குத்
தென்றுறைச்செலுராஜயோகமளிக்க வந்த
  சிறந்தமெய்த்தவ வடிவே
மானுமழுவும்மரகதவளைகுலவிய கரம்
  மல்குன்றுகுல பாணி எனி
யேதுங்காணாத்தரிசனந்தாவுமைய யுட
  னெழுந்தருள்விரிங்கு தோணி
மன்னுஞ்சந்நிதிமுனம் மருவுமிடப தேவர்
  மறைந்திருக்கவிலைக் காணேனே முன்னம்
என்னவினைசெய்தேனோ கண்பெற்ற பாவந்தானோ
  இதயத்தில்மகிழ்ச்சி யுணனே

சவாரி

சிவலோகநாதன் திருச்சந்நிதானம்
மலையாகியநந்தி மறைத்திடுதிங்கே
பலகாலஞ்செய்த பாழ்வினைகுவிந்து
மலையாகிவிப்படி மறைத்ததோவென்றார்

வசனம்

என்றுசொல்லிய நந்தனார் பின்னுஞ்சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-தேசிகதோடி-ஆதிதாளம்

பல்லவி

வழிமறைத் திருக்குதே-மலைபோலேயொரு
மாடுபடுத் திருக்குதே

பாவிப்பறையனிந்த நாதிலக்குமிவன் பாவஞ்செய்தேனே-உத்தன்
பாதத்திற்சேர்ந்தேனே ஏதேனோ-சிவலோகநாத (சிவ)

கோடியில்நின்றுதெரிசித்தாலும்போதும்- கோயில்வரமாட்டேனேனைய
நாடியிலேநின்றுபோதுமங்கேதின்றாடுந்துப்பார்க்கச்சந்நிதிவிலகாமல் (வ)

வசனம்.

இப்படிநந்தனார் தரிசனங்காணாமல் அலட்டுமெபோதுகளாயிருந்த னார் ஸ்ரீசிவன் நந்தியைவிலகச்சொன்னார்.

பெரியபுராணச்செய்யுள்

சீரேறுமிசைபாடித் திருத்தொண்டர்திருவாயில்
நேரேறும்பிடவேண்டி நினைந்தார்க்குநேர்காண
காரேறுமெயில்புடைசூழ் கண்ணுதலார்திருமுன்பு
போரேறுதனைவிலக்கவருட் புரிந்தருளிப்புலப்படுத்தார்.

கீர்த்தனம்-௩௰-ம்-தக்கடா-ரூபகதாளம்

நந்தனாரும்வாராதபத்தன் திருநாளைப்போவானென்றுசித்தன்
உலகெல்லாம்பிரசித்தங்கண்டு ஒதுங்காயிருந்ததுநந்தி

கீர்த்தனம்-இ-ம்-அங்குதசோனி-ரூபகதாளம்

பல்லவி.

சற்றேவிலகியிரும்பிள்ளாய்-சந்நிதானமறைக்குதாம் (சற்)

அநுபல்லவி

சற்றுஞ்சுரியும்-நம்பிட்ட திருநாளைப்போவார்வந்திருக்கிறார் (சற்)

சரணங்கள்

சாதிமுறைமைபேசுறான்-தன்னையிகழ்ந்துபேசுறான்
கோதிலாக்குணமுடையோன்-கோபங்கொண்டாலதாளமாட்டோம்.

வேதாகமத்தைப்போற்றுறான்-விரும்பிவிரும்பியேற்றுறான்
பூதலத்திலிவனைப்போலே-புண்ணியபுருஷனொருவனில்லை (சற்)

பத்திவிலகணங்கண்டவன்-பார்த்துப்பார்த்தநுபவுண்டவன்
சித்தந்துறைமிகவுதுசெல்வம்-முற்றுந்துறையுந்தயவுசெய்து (சற்)

வசனம்

இப்படிசாமிசொல்ல நந்திவிலகினார்

தக்கடா

நந்திதானிலகிநின்றார்-நற்சாமியவனைக்கண்டார்
இதன்பலமாத்தெனென்றார் அடக்கமதிவெட்கங்கொண்டார்

கீர்த்தனம்-௰௯-சாவேரி-ரூபகதாளம்

பல்லவி

மற்றதெல்லாம்பொறுப்பேன்
முத்திதானுங்கொடுப்பேன் (மற்ற)
பத்தனுக்குக்குற்றஞ்செய்தா
வனைத்தப்பொறுக்கமாட்டேன் (மற்ற)
இடுக்கென்றவனைத்துடிக்கப்பேசி
அடிக்கப்பொறுக்கமாட்டேன் (மற்ற)
பசித்துவந்தவருகையிலொருவன்
பொசிக்கப்பொறுக்கமாட்டேன் (மற்ற)

வசனம்.

இப்படியேசுவாமிசொல்லும்போதுநந்தனாருக்கலங்கிதாரசிலங்கின்றூர்கதன்செங்கைகுவித்து அளவில்லாத ஆனந்தமடைந்துகுதித்தார்கெக்களித்தார்கொண்டாடினார் ஆடினார்திருவடியுள்ளமதித்தாரெங்கும் லெமாகப்பாவித்தார்.

கடுக்கா

குதித்தாரெக்களித்தார்-உள்ளங்களித்தார்
பன்முபடித்தார்-கண்ணீர்-வடித்தார்-பற்களைக்கடித்தார்
ஒருதாக்துடித்தார்-இருகாம்கூடித்தார்
இப்படிதரிசனஞ்செய்தார-நந்தனார்-தரிசனஞ்செய்தாரே

துக்கடா-ஆதிதாளம்.

| | |
|---|---|
| சட்டமாச்சந்நிதானக்கண்டுதுடை | தட்டினார்-கைகொட்டினார் |
| அஷ்டமூர்த்தியெவருக்குமென்று | கூத்தாடினார்-பண்பாடினார் |
| கஷ்டமானசமுசாரசாகரந் | தாண்டினார்-மெய்வேண்டினார் |
| இஷ்டதெய்வசிவலோகநாதனை | எண்ணினார்-நாளெண்ணினார் |
| மட்டில்லாதசந்தோஷங்கொண்டுதான் | பட்டபாடுகளைப்-பேசினார் |
| சென்மங்கெட்டதென்று | தன்னையேசினார் |
| இஷ்டமானதன்செனங்களோடேயவர் | கட்டிமுத்தமிட்டுலாவினார் |
| சிக்கத்தூட்டிபோலவே | தாவினார் |

கீர்த்தனம்-௨௰-கலியாணி-அடதாளம்.

பல்லவி.

தெரிசனஞ்செய்தாரே நந்தனார்-தெரிசனஞ்செய்தாரே

அநுபல்லவி

தெரிசனஞ்செய்தார்தேன்மழைசொரிந்து
வரிசையுடன்அவர்வாழிவாழியென்று (தெரிசனஞ்)

சரணங்கள்

குதித்துக்குதித்துக்கைகளைக்கும்பிட்டுப்போட்டுத்
துதித்துத்துதித்துத்துன்பங்கள்தீர (தெரிசனஞ்)
போற்றிப்போற்றியென்று பொன்னடிவணங்கிப்
பார்த்துப்பார்த்துப்பரமானந்தங்கொண்டு (தெரிசனஞ்)
அச்சமறந்துவாசிநிலையுணர்ந்து
இச்சைமறந்தவரேகாந்தமாய் (தெரிசனஞ்)

வசனம்

தெரிசனஞ்செய்தபின்பு கொண்டுவந்த பணிவிடைசெலுத்தி அவ்வீதியில் மட்டையுடன்குட்டையைக் குளமாய்வெட்ட வேணுமென்று விசாரமுற்றார்களாம் இதையறிந்து நாளைப்போவாரமேகுளம் வெட்டத்தானேப் போகாதென்று தன்பிள்ளையை ஆளாகப்போகச்சொன்னார்.

துக்கடா-

மாளாப்பிறவிபோக்கும் பிள்ளையார்கூத்தர்

நாளைப்போவார்-நீயாரப்பா வென்றார்
பிள்ளையார்-நானுன்னைப்பார்க்கவந்தே னென்றார்
நாளைப்போவார்-குட்டையைக்குளமாய்வெட்டுவே னென்றார்
பிள்ளையார்-வெட்டித்தரட்டுமணிய மென்றார்
நாளைப்போவார்-அதெட்டுமோப்பா மென்றார்
பிள்ளையார்-குளம்வெட்டிக்காட்டு மென்றார்
நாளைப்போவார்-அப்பமாய்ப்பருக்குநெல்லைக் கொடுத்தார்
பிள்ளையார்-அப்பனேயிதுபோதும்போதுமென் றுரைத்தார்
நாளைப்போவார்-களித்துக்குளிக்கப்பமே யிருந்தார்
பிள்ளையார்-குளத்தைவெட்டிதற் கிசைந்தார்

தரு-௩-ம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி

தடாகமொன் றுண்டாக்கினார் கணநாயகர்
தடாகமொன் றுண்டாக்கினார்

அநுபல்லவி.

சடாமகுடத்தான்-சாம்பவி யுடன்வர
சகலமுனிவர்மனத்-தாமரையு மலர
கடாட்சமாகக்குகன்-கணபதியுடன் மன்ன
காதலாயெல்லருந்தன்பப்-போதயனுமித மென்ன (தடா)

சரணங்கள்

சந்திரமூலாவியதாமரைபூத்தா சகிக்க-மிகுந்திடுஞ்சேற்
கெண்டைவாரா லிறால்வக்கணமக்குருதிக்க

சந்திரபிருக்குதபறவைகள்முழுகினுஞ் சூழச்
சோமசூரியர்கள் சுகமுடன்வந்து தாழ
விந்தையுடனேபல வேள்வியந்தணர் செய்ய
விளங்குஞ்சங்கிணமுப் பஞ்சமில்லாமற் றாய்ப(நடாக)

ஒதியோணதியாணதுதசம்பிக நாணா- ஆம்பல்மலர்ந்து

ஒதிமமுங்குருகின் குலமும் எதிர் காண
சேதிமாருவுந்தலை-கருகிழலும கொடிக்கச்
சாலிக்கடமபைமான்கள்-சூழ்ந்துவந்தங்கே அடிக்க
மாதர்மலர்க்குழலார் மகிழ்ந்து அங்கே நீராட
வல்லினோ குருதைப்விட்டோட-வல்லவர்களுருககொண்டாட-நடா

வாசனைதங்கியமல்லிகைமுல்லையின் சாலே - சந்தனச்சாலே

வாழையுடலாக்கமுருகும் கணமாமணர்ச் சோலை
ஆசைபாகமிலெழுதுநவே கடிக்க
அருமறைப்புராக-ணதுதினமும் படிக்க
தேகுலாவுந்திவ்யத்-தீர்த்தமாகுமென் றந்தத்

திசைதேவர்களும்புகழ்த-இசை நந்தனார்தஞ் சொந்தத்(நடாக)

நாளைப்போவர்-தில்லைகளேந்துபார்த்தார்
ஞானக்கெட்டியிருங்கவுமகிழ்ந்தா
பிள்ளையாரிருக்கக்கண் கவிர்காணுர்

வசனம்

இதெல்லாருஞ்சிவஞ் செயலென்றாசந்தேகத்தைக்கொண்டுமுன்போலவேயோ ஸ்ரீவல்லம்வந்துதன் னுடன்வந்த பதினெருபேர்களுடன் ஆதநூர்வந்துசேர்ந்தார்.

பெரியபுராணச்செய்யுள்-விருத்தம்

இத்தன்மைபிசர்மகிழ் பதிபலவுஞ்சென்றிறைஞ்சி
மெய்த்ததிருத்தொண்டுசெய்து விரவுவார் மிக்கெழுந்த
சித்தமொடுத்திருத்தில்லைத் திருமன்றுஞ்சென்றிறைஞ்ச
உய்த்தபெருங்காதலுணர் வொழியாதுமிக்குதிப்ப

சிந்து

பேணிச்-சாருந்தொழின்முறைபாரும்புகல், திருப்புன்கூர்ச்சென்றாரைக்-கண்டு-சேவித்திசைபாடிப் பாவித்தபின், தில்லைச்சிதம்பரத்தைக்-கண்டுமென்றுவலுடன் - காளைப்போவேனென்றாராம்.

வசனம்.

நந்தனார்திருப்புன்கூர்ச்சிவலோகநாதனைத்தரிசனஞ்செய்த ஆதநூர் வந்தநாள்முதல்லனனுதக்கமுதலான ரம்விட்டார் தில்லையம்பலத்திருச்சந்

றம்பலமென்றுசொல்லைத்தலைப்பட்டச்சேரியிலுள்ளபெரியோர்களைக்கூப்பிட்டார்வணங்கிக்கும்பிட்டுச்சொல்லுவார்.

—*—

கீர்த்தனம்-இ-ம-பியாகு-ஆதிதாளம்

பல்லவி.

சிதம்பரம்போவேனான்-நாளைச்-சிதம்பரம்போவேனான்

அநுபல்லவி.

சிதம்பரம்போனேன் தேறித்தெளிவேன்
பதங்களைப்பாடிப்பார் புகழ்தில்லைச் (சிதம்பரம்)

சரணங்கள்.

ஒருகாஞ்சொன்னு லுலகங்களுய்ப்பு
இருவினைப்பயனில்லை யென்பாருதில்லைச் (சிதம்பரம்)
பாதிராத்திரியில் பன்மறையோதி
வேதியர்போற்றி விளங்கியதில்லைச் (சிதம்பரம்)
திறமொன்றறியாத் திக்குகள்செய்யும்
பறையனுப்பிறந்த பாவங்கள் தூலைச் (சிதம்பரம்)

வசனம்.

நாளைப்போவார்தனக்குத் தெரிசனங்கிடைக்கவேண்டியதற்காகக் கற்பகப்பிள்ளையாரைவேண்டுதல்.

விருத்தம்

காலனுடன் றூமிபடச்சாய்த்திடுவான் செங்கமலக்காலைத்தூக்கிக்
கோலமுடனடனமிடுந்திருமன்றுள் நாயகனைக்குற்றநீக்கிப்
பாலிக்கும்படியெனக்குன் னருள்புரிவாயென்று நற்பழக்கள்வைத்து
மேலைக்கோபுரவாசல்கற்பகத்தைச்சிந்தையுள்ளேவேண்டுவாரே.

வசனம்

நந்தனார்சேரியிலுள்ளபுலையர்களை அழைத்துக்கொண்டு சிதம்பரம் போய்த்தரிசனம்பண்ணவேணுமென்று ஆசையுற்றபத்திமார்க்கங்களைச் சொல்லலுற்றார்.

கீர்த்தனம்-இ-ம-மாஞ்சை-ரூபகதாளம்.

| | |
|---|---|
| நாளைப்போகாமலிருப் | பேனோ-இந்த |
| காற்றகரம்பு மின்னலுக்கைப் | பேனோ-நாம் |
| நாளைப்போகாமலிருப் | பேனோ-இந்த |
| நாறுமுடலைக்கண்டுகளிப் | பேனோ-நான் |
| நாளைப்போகாமலிருப் | பேனோ-இந்த |
| நாளைவிழுந்தழுகிப | பேனோ-[illegible] |

காணாமற்போகாமலிருப் பேனோ-அந்த
சபையோர்க்கருகிலேபோயொளிப் பேனோ-நான்
காணாமற்போகாமலிருப் பேனோ-சிவ
ஞானத்தைப்பாராமலிருப் பேனோ-நான்
காணாமற்போகாமலிருப் பேனோ-இந்த
காட்டிவிழுந்துசென்மம்படைப் பேனோ-நான்
காணாமற்போகாமலிருப் பேனோ-இல்லை
காதலைக்காணாமல்போசிப் பேனோ-நான் (கா)

ஆனந்தக்களிப்பு

காணாமலிருக்கலாகாது பாரும்
கட்டைகடைத்தேறவேண்டியிருந்தால் (காணா)

முத்தியளித்திடும் பாதம்-இல்லை
மூவாயிரம்பேர்கள்பூசிக்கும் பாதம்
சத்திக்கிணையான பாதம்-வேத
சாஸ்திரங்களாலுந்தேடிய பாதம் (காணா)
காலனைச்சீறிய பாதம்-ஜன
காதிக்குநன்னெறிசெலுத்திய பாதம்
மாலயன்தேடிய பாதம்-எங்கள்
மாணிக்கவாசகர்பிடித்த பாதம் (காணா)
ஆசையைப்போக்கிய பாதம்-பர
மானந்தவெள்ளத்திலாடிய பாதம்
வாசம்பொருந்திய பாதம்-இல்லை
மாகாளிதாழ்வைநீக்கிய பாதம் (காணா)
பாலகிருஷ்ணன்தொழும் பாதம்-காட்டில
பாம்புபுலிக்குக்கூத்தாடிய பாதம்
கோலச்சிலம்பணி பாதம்-இல்லை
கோவிந்தராசர்தெரிசிக்கும் பாதம் (காணா)

வசனம்

நந்தனார்சிவனைக்காணாமல் காலம்வீணாகப்போகலாகாதென்று கூட்டி வெவார்

கீர்த்தனம்-இ-ம்-மோகன-ரூபகதாளம்.

துக்கடா.

எல்லோரும் வாருங்கள்
சுகமிருக்குது பாருங்கள்-நீங்கள் (எல்லோரும்)

நல்லோர்பணிந்திடுந்தில்லையம்பல
நாதனைப்பாதம்பணிந்துகொள்வோம் (எல்லோரும்)

## கண்ணிகள்.

வாருங்கள்-பரமானந்தமிருக்குதுபாருங்கள்

உடலெடுத்தபின்னேனுமேகண்டினீர்
விடமெடுத்துண்டமேனியன்சேர்வார
வடம்பிடித்திடவாருங்கள்தில்லையில்
இடம்பிடித்துநாமெல்லோருமவசூழலாம் (வாருங்கள்)
சொல்லடா தில்லைச்சிற்றம்பலமென்று
மெல்லடாவாயைசத்திதிமோமே
தில்லடா இந்தமாயப்பிறவியைக்
கொல்லடாசிவலோகங்குடிபுக (வாருங்கள்)
சன்னடாநமதில்லறவாழ்க்கையை,நீ
தள்ளடாநந்தனார்சொல்லுறுதியென்று
கொள்ளடாதில்லையம்பலத்தாண்டவன்
பள்ளடாவென்றுபாடிக்கூத்தாடியே (வாருங்கள்)

## வசனம்

இப்படிவாருங்களென்றழைக்கப்புலையர் வாராமலிருக்கநந்தனார்கல்ல வார்த்தைசொல்லிப் பலையனை சிவநாமத்தைச்சொல்லச்சொன்னார்.

## இருசொல்லலங்காரவாக்குவாதம்

நந்தனார்-தில்லையம்பலமென்றுசொல்லச்சொன்னார்
புலையர்-கள்ளப்பேச்சென்றுபள்ளர்சொன்னார்
நந்தனார்-சங்கரனென்றுசொல்லச்சொன்னார்
புலையர்-இங்கேவாவென்றுகில்லெனன்றார்
நந்தனார்-சற்றேயாயினுஞ்சிவனைத்தியானம்பண்ணென்றார்
புலையர்-கத்தைதமோடேபாலைபணம்பணமென்றார்
நந்தனார்-திருச்சிற்றம்பலமென்றுவிலக்கச்சொன்னார்
புலையர்-வெருச்சகம்பளமென்றுமுலக்கச்சொன்னார்
நந்தனார்-சேரியில்நல்லகாரியமிலென்றார்
புலையர்-ஏரிவில்லைமாரிவிடுமென்றார்
நந்தனார்-விட்ட [illegible]
[illegible]

புலையர்-விட்டவிதைமுளையாமல் நட்டபயிர்பயிராமல்
கெட்டுநாளுங்கொம்புங்கஷ்டமென்றார்
நந்தனார்-உங்கள்புலைத்தன்மைபோகுமென்றார்
புலையர்-எங்களைக்கெடுத்தாயேபாவியென்றார்
நந்தனார்-தேவாதிதேவனைத்தெரிசிப்பீரென்றார்
புலையர்-பாவாடைராயனைப்பாவிப்பீரென்றார்
நந்தனார்-அவனைத்தாளுமீசனுக்கன்புசெய்யென்றார்
புலையர்-இரைத்தாரை-கொத்தவர்க்கின்பமேதென்றார்
நந்தனார்-இனிமுஞ்சிவனைப்போற்றிக்களிப்போமென்றார்
புலையர்-பறைதாத்திரிகொள்ளைப்போமென்றார்
நந்தனார்-பொன்றுனைசொன்றைசலித்தமேலென்றும்
புலையர்-ஏங்காருமன்றுமேலெகெடுத்தையுண்டாம்
நந்தனார்-அப்பனேருக்கிஷ்டமுடனிருப்பேன்றடையேது
புலையர்-கப்பலோட்டிப்பட்டகடன்கொட்டைதாற்றுள்தீராது
நந்தனார்-பூசத்திருநாளிற்போய்வருவோமென்றார்
புலையர்-பேசத்தெரியாதபேயாகிபோவென்றார்
நந்தனார்-அருதூறைவிட்டாலம்பலத்தேகேட்குமென்றார்
புலையர்-உருதாயவிரிட்டாலுள்ளபடிவினையுமென்றார்
நந்தனார்-சித்தமெல்லாமம்பலத்தேசென்று
புலையர்-புத்தியெல்லாம்வேறாய்ப்போச்சதென்றார்
நந்தனார்-குற்றமற்றீசனைக்கூடுவீரென்றார்
புலையர்-கைத்தாளம்போட்டுக்கதறுவீரென்றார்
நந்தனார்-தாண்டவத்தெய்வமேசருந்தெய்வமென்றார்
புலையர்-தாண்டிவீரப்பனேதொழுந்தெய்வமென்றார்
நந்தனார்-இஷ்டப்படிகடாக்குமீசனைத்துதியென்றார்
புலையர்-கஷ்டப்படோட்டோமெசக்காரேபோவென்றார்
நந்தனார்-கொண்டாடித்தெய்வத்தைக்கொள்ளுவீரென்றார்
புலையர்-பெண்டாட்டிதெய்வமேபெருந்தெய்வமென்றார்
நந்தனார்-கனத்தைத்தக்கொடுக்கவைத்தகுருவென்றார்
புலையர்-குலத்தைக்கெடுக்கவைத்தகோடாலிச்சாம்பவென்றார்
நந்தனார்-பழக்கம்பரமாதிவேல்பறையாவென்றார்
புலையர்-குலவழக்கமறியாதகுருடாவென்றார்
நந்தனார்-நாக்கறுப்பேன்சிவனைகலிதுவீரென்றார்
புலையர்-மூக்கறுப்பான்கனதவெமாழிகதீரேயென்றார்

வசனம்.

நந்தனார் பெரியோருடைய அநுஷ்டானத்தைப் புலையர்களுக்குச்சொல்லுகிறார்.

வேறு.

நந்தனார்-சிவனேதெய்வம்-சிதம்பரமேகயிலாயம்
தவமேபெருமைதான்சம்பிரதாயம்
புலையர்-சேரியேசொர்க்கம்-ஏரியேகைலாயம்
மாரியேதெய்வம் மதசம்பிரதாயம்
நந்தனார்-படிப்பதருளம்பார்ப்பதுமூலம்
குடிப்பதுமதிப்பால் குலசம்பிரதாயம்
புலையர்-பிடிப்பதுநண்டு பொசிப்பதுஇறைச்சி
குடிப்பதுகள்ளு குலசம்பிரதாயம்
நந்தனார்-பாழைக்கடப்பார் பரவெளிதாண்டி
கோழையறுப்பார்-குலசம்பிரதாயம்
புலையர்-ஆழத்திற்குளிப்போம் அருங்கோடைவந்தால்
கூழைக்குடிப்போம் குலசம்பிரதாயம்
நந்தனார்-ஆசையைப்போக்கிஐம்புலனைக்கட்டி
மாசற்றுவாழ்வமதசம்பிரதாயம்
புலையர்-பூசைகள்புரிவோம் பொன்னேருழுவோம்
கூசாமல்வாழ்வோம் குலசம்பிரதாயம்
நந்தனார்-மையத்திலாடி மனக்கயிறுபூட்டி
மையத்திருப்பார் மதசம்பிரதாயம்
புலையர்-கைதனிலேகளையும் காலிலேசேறு
மெய்யிலேபொக்கு பறசம்பிரதாயம்

---

வசனம்

சிவபத்திபண்ணினால் அணிமாதிகள் அடையலாமென்று நந்தனார்சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம்-நீலாம்புரி-ஜம்பைதாளம்

அஷ்டமாசித்திகளைப்பெறலாந் தில்லையி
லானந்தத்தாண்டவன்கோபுரங்கண்டு
இஷ்டமுடன்வீதிவலமைத்து-நாதன்
இணையடிதொழுதாற்கு இனிபிறப்பில்லை
கேளுங்கள்கேளுங்கள்சொன்னேன்-நீங்கள்
வாடாமலேதாடிவருமின்றுண்பிரா

கருகுமணிபச்சைச்சேலைபோதுமுடிந்தல்
கள்ளவேஷமெக்களுக்குள்ளேநிலையாது
பருகுலகூழ்க்கருப்போதும்வாய்
பதிவார்த்தைகளோபேசிப்பசப்பாதேபோடா.

வசனம்.

நீர்சொன்னபடிகேட்பதில்லைஎங்கள்நிச்சயமறியாமல்நீயங்காதே நீ சொன்னபடிகேட்பதில்லை.

ஏசல்.

புலையர்-பாப்பாரதெய்வது-பக்கிகாதபறையனைக்
காப்பாற்றமாட்டாது-கைவிடுவீரென்றார்
நந்தனார்-பாப்பாரத்தெருவென்று-பார்த்துபரிதிபோல்
காப்பாற்றுமல்லவோ-கண்ணுறுநீலியென்றார்
புலையர்-அடுக்காதவார்த்தையை-அல்லும்பகலோதியே
பிடிக்கிநீர்பிடிவாதம்-போதுமேயென்றார்
நந்தனார்-கடுக்காயைத்தின்பமோ-கன்னலதுபோலவே
கொடுக்காதகாணுலும்-கொள்ளுவீரென்றார்
புலையர்-பித்தனென்றுசொல்லுவார்-பேருலகிலெல்லோருஞ்
சத்தியமிதல்லவோ-கன்றுவீரென்றார்
நந்தனார்-பித்தனுயிருந்தாலும்-பிறவியறுத்தவர்க்கும்
முத்திகொடுக்கும்நல்ல-மூர்த்தியவரென்றார்
புலையர்-இத்தனைநாளுமிக்கே-யில்லாதவார்த்தையைக்
கத்துகிறீருவென்ன-காரியமோவென்றார்
நந்தனார்-இத்தனைநாள்சென்று-நடனடித்தாமரையைப்
பத்திசெய்யின்மனதேதும்-பாக்கியமீதென்றார்

அக்கல்.

பாக்கியமீதென்று-பரமசிவபக்தி
மார்க்கங்களெல்லாம்-கிரியையாய்திரட்டி
எடுத்துரைசெய்வார்-நவமானுசாதி
பிடித்தறியாமல்-புலம்புவாரன்றே

விருத்தம்.

வக்கனைக்காரநந்தா-வாய்ப்பட்டுப்பேசவேண்டாம்
சக்கரைப்போலவேபேசி-சாதித்துக்கண்டாயன்றே

பஃறுலகலம்வர்தால் பரமனூர்திருநாமத்தான்
சக்கைப்போலேயிதான்றுஞ், சாதிப்பார்முத்திதானே

வசனம்.

புலவர்களனேகராணபடியால்பலவிதம்பலர்சொல்சொல்லுகிறார்.

ஏசல்-கீர்த்தனம்-இ-ம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

புலவர்-ஆண்டிப்பரதேசியாகாவென்றவர்
வேண்டுந்தெய்வமது விளங்காது வென்றார்

கந்தனார்-மூன்றுலகுக்கிறை முன்னின்றுகைகூப்பி
ஆண்டவனேயென்று அர்ச்சித்து மென்றார்

வேறொருபுலவர்-சாத்தைப்பிடுங்கியே நடவுகட்டவிழ்த்து
சோற்றுக்கலவைவிடுஞ் சுகபிது வென்றார்

கந்தனார்-கூத்துவனார்வந்து கூப்பிடும்வேளையில்
மாத்திரைப்பொழுதில்லை மன்னுவி ரென்றார்

வேறொருபுலவர்-பாருலகுமக்களும் வாழ்கின்றவிடத்திலே
யாவுளுமெப்போது மழுமூஞ்சி யென்றார்

கந்தனார்-தேனுமேலேமெத்த தித்திக்குஞ்சிவத்தை
வாளாதுமூக்கனுக்கழுமைகயோ வென்றார்

வேறொருபுலவர்-மூக்குமனிவைப்பார்த்து மூணைகியேசக்கேரம்
காக்கைபோலலேகம்மாக் கதறுகிறீ ரென்றார்

கந்தனார்-வாக்கிலேசிவநாமம் வாராதபாவிகள்
நாக்கிலேசனிசிலைய நாட்டுமே னென்றார்

வேறொருபுலவர்-மடைவாயின்பறவைபோல் மதியாமலிருக்கிறீர்
தடைசாவிநீயென்று சொல்லுமோ மென்றார்

கந்தனார்-விடையேறுமீசனை வெட்டவெளியிலுள்ளவி
அடையாளங்காணுதலுகெ ரென்றார்

வேறொருபுலவர்-மறையோர்தந்தெரியாத மடையராய்ப்பூமியில்
குறையாதபுலைத்தன்மை கொண்டோமே யென்றார்

கந்தனார்-பறைபறையப்பிறந்தாலும் பாகதிதேடலாம்
உறுதியோத்திரம்வேண்டும் உமக்குண்டோ வென்றார்

வேறொருபுலவர்-தலைகறுப்பாடு தங்கச்சிகொத்திவார்
அலகையோசனை யறிகிலை மென்றார்

கந்தனார்-கைப்புசித்திலல்லோ ரோசலைக்நாக்கைத்
இலைப்போலேவிட்டீப்ப தெண்டவிடு மென்றார்

வேறொருபுலையர்-உலகத்திலெய்யாத உருவெத்திச்சேரியைக்
கலைவிட்டுப்பலன் கண்டதோ வென்றார்

நந்தனார்-பலகாலஞ்சொன்னாலும் பலியாதுபாழ்வினை
விலகாமலிருக்குது-வேடிக்கை யென்றார்

வேறொருபுலையர்-திருப்புன்கூர்சிவனைச் சேவிக்கலாமென்று
விருப்பமுடனுரைத்த வித்தகா னென்றார்

நந்தனார்-கரும்புதின்னக்கூலி கையில்கொடுப்பதுண்டோ
இரும்புமனதுக்காரம் இலவேயே யென்றார்

வேறொருபுலையர்-பத்தியில்லாதவன் புலம்புறான்சிவனென்று
கத்தினாலுமென்ன காரியமோ வென்றார்

நந்தனார்-பித்தனுமொருதரம் நினைவுடனேசிவன்
சத்தமிருந்தாலொன்றுந் தாழ்வில்லை யென்றார்

வேறொருபுலையர்-சேரியிலிருந்தாலுஞ் செல்வங்குறைந்திடும்
உனைவிட்டாகிலும்நீ போதக்குவி ரென்றார்

நந்தனார்-யாருக்குமெல்லாரும் மனைவினைப்போலவே
சேருமோர்தில்லைச் சிதம்பர மென்றார்

வேறொருபுலையர்-பாலாறுபெருகவே பண்ணையைப்பயிரிட்டு
ஆளாயமேலேநீறுக் கவலைபுதீ ரென்றார்

நந்தனார்-பாலகிருஷ்ணன்ஒருநாள் பாதத்தைநான்கண்டு
காணாம்பதவியை நாடியே னென்றார்

வசனம்.

அவர்களிலொருபுலையர் உரைத்ததைப்போதாதந் சிவனைக்கொண்டாடி ஒல்லைமற்றுடைய தொழிலுக்குக்கெடுதலுண்டு பண்ணவேண்டாமென்று சொல்லநந்தனார்கேட்டுச்சொல்லுவார்.

கீர்த்தனம்-இ-ம்-தன்யாசம்-ஆதிதாளம்.

ஆகாசமென்னொருவர் அறிகட்டலைக்கலமே விலையும்
பாவம்-தக்காமத நலையும்
சிவசிவாவென்றொருதரஞ்சொன்னால் செம்மைசாலைமார்க்க
புண்ணியகரும்பதுவே யார்க்க
தில்லையம்பலதரிசனங்கண்டால் தேவருக்குந்தாரா
அந்த-மூலையும்பொருந் கரிசா
அங்கையக்காரர்தொழில்செய்யாதவன் யாருமாவதோசி
செம்மல்போதுமே போசசே

—※—

வசனம்.

நந்தனுடைய புலையர்களைப்பார்த்து ஆண்டைக்குச்சொல்லிக்கொள்ளப்போவேனென்றுசொல்ல.

சிந்து.

நாளைப்போவேனென்றாராம் - அங்கே-நாயிப்பறையர்களோடிவந்து, அண்டைசீர்போகாதே-நமக்-காண்டை பொல்லாதவன் வேண்டிக்கொள்ளான், பார்ப்பாரசாதியுண்டே.

வசனம்.

இப்படிச்சொல்லியபுலையரைப்பார்த்து நந்தனார்சொல்லுகிறார்.

பல்லவி.

கீர்த்தனம்-௩-ம்-செஞ்சுருட்டி-ரூபகதாளம்

ஆண்டைக்கடிமைக்காரனல்லவே ஊர
ஆண்டைக்கடிமைக்காரனல்லவே

அநுபல்லவி

மூன்றுலோகமும்படைத்தளித்திடு
மாண்டவர்க்கொத்தடிமைக்காரன் (ஆண்டைக்)

சரணங்கள்

ஆசைக்கயிற்றிலாடுபம்பரம்போல
பாசமறுத்தவர்க்கடிமைக்காரன் (ஆண்டைக்)
இல்லைவெளிக்குள்ளெல்லைகண்டேறி
தேறித்தெளிந்தவர்க்கடிமைக்காரன் (ஆண்டைக்)
சிலம்பிறையணிந்தம்பலத்தாடிய
பாதம்பணிந்தவர்க்கடிமைக்காரன் (ஆண்டைக்)

வசனம்

தன்னையடிமையாகக்கொண்ட வேதியர்சொற்கேளாதவரல்ல அப்படி யிருந்தும்பக்திபண்ணவேணுமென்றுபக்தி கீர்த்தியைச்சொல்லிக்காட்டினார்

விருத்தம்

தலைப்பொருளுமாளிகர்மெய்க்குஞ் சரித்திரங்கொண்டவர்தம்
பலமனைக்குநடிகவேண்டும் பகர்நதித்தீர்த்தியவாசியாத்திரை
அக்குளமமுகொண்டேபோய நதிக்கிடப்போர்கோலெல்லைநீ
மென்செயலாருகாமாறு செயலேதான்றில்லையென்றார்

திருநாளைப்போவார் அனேகவிதஞ்சொல்லப் புலையர்கேளாமலிருந்ததினாலிவன்செயலென்று நாளைப்போவார் சும்மாவிருந்தார் அந்தச் சேரியில்புலையர்கூட்டங்கூடி மூத்தோனால்நந்தனாருக்குப் புத்திசொல்வோமென்றெண்ணி அந்தச்சேரியிலே வெகுநாளாயிருக்கின்றவோர்புலையன்வயதுமிகுந்து உடல்தளர்ந்து பல்லுகளுதிர்ந்து தோலுகள்சுருங்கி நரம்புதெரிந்து முதுகுசரிந்து முழுதும்வளைந்து அங்கம் சொரிபடர்ந்து நினைவுமிகுந்து அதனைச்சொறிந்து செந்நீர்வடிந்து அவ்வுடல்நடுங்கிஇவ்விதமிருக்கும் பெரியகிழவனாரை யனுப்பக்கோலூன்றிகூனிகுறுகிக்கோணலாய்நடந்துவந்து அவன்நந்தனாரைப்பார்த்து கட்டியணைந்து தலைநிமிர்ந்துகண்ணீர்சொரிந்து மார்பில்வழிந்துமனங்கனிந்துகாதல்மிகுந்து ஒன்றும்தெரியாதவனென்றுநினைத்துபரிந்துஞாயமறிந்துசொல்லுவான்.

கீர்த்தனம்-௩-ம்-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி,

ஞாயந்தானோநீர்சொல்லும்-ஐய்-நந்தனாரே
நம்மசாதிக்கடுக்குமோ (ஞாயந்)

சரணங்கள்.

சேரியில்லா
செய்துக்கொண்டுவந்த
ஊரிலெங்குமது
கூறுதியாச்சுது
வழக்கம்-நீர்
பழக்கம்-இந்த
முழக்கம்-வெகு
ஒழுக்கம்-இது(ஞா)

சிதம்பரமென்கிற
செப்பிடுங்காரியம்
மதம்பிடித்ததுபோ
மண்டலப்பறையருக்
பேச்சுநாங்கள்
போச்சு-அது
லாச்சு-இந்த
கேச்சு-இது(ஞா)

பறையருக்கேதுதைப்
பார்க்கவேயுனக்கு
பயல்களுக்கேயுப
பண்ணிவைத்ததெல்லாம்
பூசம்-அதைப்
விஸ்வாசம்-சிறு
தேசம்-நீர்
மோசம்-இது(ஞா)

வசனம்.

சேரியில்பெரியகிழவனானபடியால்ஜாதிவழக்கங்களெல்லாம்அறிந்தவனாதலால்நந்தனாருக்குஇன்னமுஞ்சொல்லுகிறான்.

சிந்து,

பாப்பாரசாதியுண்டே-என்ன-பாடுபெடுமுழக்காமெங்கே-நமக்குத்
திருநாளோ-அந்த-ஞாயமுண்டோ மென்னமாயமிது-வென்றே தடை
டு

செய்தார்-சிவன்-வேடிக்கைதானென்று-நாடிக்கொண்டே - அறியாது போலிருந்த.

### பெரியகிழவன்சொல்லிய-விருத்தம்.

கழனியைத்தெய்வமெனச்சுற்றி வந்து தலைவணங்கிக்கரங்குவித்து
உழுதுபரம்படித்துவிரைதெளித்து முளைசொள்ளநீரோடவிட்டு
பழுதறவேநட்டகளைக்களைபிடுங்கி மடையினில்நீர்பாயவிட்டுச்
செழித்திடவேபொங்கலிட்டுக்காத்தவராயனைவேண்டுஞ்செய்கைதானே

### கீர்த்தனம்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

சுவாமிதெரிசனநமக்கேன்போ-புலைச்
சாதியன்றோவந்தநீதியறியாமல்

அநுபல்லவி,

பூமிதெரிசனப்போதும் வெகு
புண்ணியமேசோறுபோடுமின்ன மொரு (சுவாமி)

சரணங்கள்,

நாத்துநரம்புகளைச்சுமப்பதும் உழுவதும்
நஞ்சைவயலைசுற்றி வருவதும்வளம்பெற
யாத்திகள்கட்டுவிரை தெளிப்பதும்பறிப்பதும்
பாயுமடையைத்திறந்திடுவ மன்றியில் (சுவாமி)
சேரியிடையில்குடியிருப்பதும் பதருள்
சிதறைத்தூற்றநெல்லளப்பதும் பார்ப்பதும்
ஊணாவலைந்துதழுக்கடிப்பதும் மதுக்குடி
முண்டுகளித்துநாம்உறங்குவ தன்றியில் (சுவாமி)
ஆண்டைமார்களிடும்பணிவிடை செய்வது
மருகில்நின்றுவாய்விடுவதும் நடுவதும்
தாண்டிநடந்துநெடுங்கோல்பிடிப்பது மாப்பதும்
தனித்துச்சுடலைதினங்காப்பது மன்றியில் (சுவாமி).

விருத்தம்.

சாதியின்முறைமைகாட்டித் தடையிடப்போதுமென்றூர்
வேதமாமுனிவராலும் விளவியுங்கண்டாரில்லை
பேதையாம்புலவருக்குப் பேரின்பநிஷ்டையேதென்
றுதலாலென்செய்வோமென் றம்பலத்தஞ்சுவாமே

வசனம்,

பெரியகிழவனைப்பார்த்துநந்தனார்சொல்லுகிறார்,

கீர்த்தனம்—இ-ம்—கண்டகம்—ஆதிதாளம்,

சிதம்பரதெரிசனங்காணுவிடிவேந்தச்சென்மசாபல்ய மாமோ
செனனமரணசமுசாரம்பெருகவேசெய்தவினைகள் போமோ
கண்ணுங்கருத்திருக்கச்சிவனைக்காணுமல்காலக்கழிக்க லாமோ
காலபாசந்தருகில்வராமல்கண்டுபயந்து போமே
இப்படியேயெப்போதுமிருப்போமென்றெண்ணியிருக்க லாமோ
இருதயமதிந்திடச்செய்திடுங்கன்மங்களிகழ்ந்துபிரிந்து போமே
பின்னுமுன்னுமறியாகமூடர்கள்புத்திகேட்க லாமோ
புலையரவாடியிருக்கிறுமெய்த்திடும்புண்ணியர்கள் போமோ
பரமசிவனைக்கொண்டாடவேணுமென்றுபரிந்துபாவி பார்த்தேன்
பாபஞ்செய்தவர்க்குப் பலியாதுஅதிலபாடுபட்டுப் பார்த்தேன்

வசனம்.

சேரிப்புலையர் கூட்டங்கூடி அனுப்பிவைத்தபெரிய கிழவன்நந்தனுருக்குச்சொல்லக்கேட்டு ஆச்சரியபட்டு நந்தனூர் கிழவனைப்பார்த்துச் சொல்லுவார்,

கீர்த்தனம்—இ-ம்—தன்யாசம்—ஆதிதாளம்.

| | | |
|---|---|---|
| மீசைநரைத்துப்போச்சே | கிழவா | ஆசைநரைக்கலாச்சோ |
| பாசம்வருகலாச்சே | கிழவா | பாவம்விலகிப்போச்சோ |
| கூனிகுறுகிப்போச்சே | கிழவா | கோபம்விலகிப்போச்சோ |
| அங்கந்தளர்ந்துபோச்சே | கிழவா | ஆங்காரம்போச்சோ |
| சேரியைமறந்தாயே | கிழவா | சிதம்பரநினைந்தாயோ |
| மானிடசென்மமடா | கிழவா | மாண்டால்வருமோடா |
| அம்பலத்தரசனடா | கிழவா | ஆருந்தெய்வமடா |
| திருவடிபணியாயோ | கிழவா | தேடித்தெளியாயோ |

வசனம்,

நந்தனூர் இவ்விதஞ்சொல்லி சிவகாமவல்லிபாகனை நினைந்து நீறள்ளி பெரிய கிழவன் முகத்திலே தடவி வாயிலே போட்டு கட்டியணைத்துக்காதிலே சிவமந்திரமுபதேசித்தார் உபதேசமாவுடனே பெரிய கிழவன் சித்தந்தெளிந்துசிவமாய்நிறைந்தஉற்றதுணர்ந்து ஒருவனுயிருந்து அந்தனடியாரருளினதுவென்றுபத்திமிகுந்துபரவசங்கொண்டுபேசத்தெரியாமற்பேசுவார் நான் இன்றைக்குததான்பெரியகிழவனுனேன் நந்தா எனது பந்தந் தீர்க்கவந்தாய் முத்திதந்தாயென்று சுற்றிவலம்வந்து அடிபணிந்துவிடைபெற்றுக் கண்டேன் களித்தேன் ஆநந்தங்கொண்டேன் குறைதீர்த்தேன் அமுர்தமுண்டேன் பசிதீர்ந்தேன்பிறவிவென்றேன் விடுகின்றேனென்றுபேசிக் கொண்டு பெரிய கிழவன் வருகிறுன்

பெரியகிழவனுர் நந்தனுராலுபதேசம்பெற்றுகருகின்றூர்;

கீர்த்தனம்-இ-ம்-சங்கராபரணம்-ரூபகதாளம்,

பல்லவி,

பெரியகிழவன் வருகிறான் போரானந்தக்கடலாடி. பெரிய

சரணங்கள்,

பரவியமாயையிலிருந்து பார்முதல்பூதங்களைந்து
பெரியவரொன்றுணர்ந்து பேரின்பலாபத்தையடைந்து பெரிய
படிபுகழ்நந்தனார்மகிழ்ந்து பரமசிவபக்திபுரிந்து
கொடியபாவங்களிறந்து கூனிக்குறுகிநடந்து பெரிய
நந்தனார்சொன்னதறிந்து நானென்னுரையுமிழந்து
பந்தமயக்கந்தெளிந்து பரவெளியாககிளைந்து பெரிய

வசனம்,

புலையர்களெல்லாங்கூட்டங்கூடி நந்தனாருக்குச்சிதம்பரப் பித்துத்தெளி
யபுத்திசொல்லவனுப்பியபெரியகிழவன் நந்தனாரிடத்துக்கொண்டு அவ
ருடையமகிமையெல்லாம்புலையர்களிடத்தில்சொல்லிக்கொண்டாடுவான்

பெரியகிழவன்,

திருநாளைப்போவார் இந்தச்சேரிக்குமூருக்கு
மாருக்கும்பெரியவர் திருநாளைப்போவார்
ஒருத்தராகிலுஞ் சிவசிதம்பரமென்று
உரைத்திடவொன்றுண்மைகூறிய திருநாளைப்

அடாதுசெய்தால்படாதுபடுவீர் விடாதுபாவந்தொடாது அவன்
பேரொடாதே தாறுபடாதே கையிடபடாதேவெம்பகைவிடாதே அப்பா
இடாங்கன் கொப்படாதுபட்டால்விடாதுசலம்படாதவன்பயப்படாதவ
ன்இடங்கொடாதவன் அடங்காதவன் நிலைவிடாதவன்மாறுபடாதவன்
மனம்விடாதவன் அடங்கிடாதவன் விடையவலைப்படான்மாயைக்ககப்
படான்சிவனையிடைவிடான் கழனிசேர்நடான்கலப்பைக்கனைத் தொடா
ன்நமதுவழிப்படான்பொலி கிடாரிகல்லைப்பிடாரிவெல்லப்படாதுசொ
ல்லப்படாது கல்லப்படாதுதள்ளப்படாது யாரையும்விடாது தன்பந்
தொடாதுவழியைத்தேடாது இருவினைபடாது செனயங்கொடாதுதெ
ய்வங்கெடாது அவன்கைவிடாது வேறுபடாது ஆசைப்படாமல அருளை
க்கொடாது பங்கப்படாததங்கக்கடாரம் பொங்கப்படாதவன் இணைவி
டாதபுண்ணிய தடாகஞ்செய்தவன்படாதிபதி பிடிபடாதசிங்கம் அள
வுபடாதமகிமைவிடாதபெரியவன்டா தெரிசனப்படாதசந்நிதி விடாத
நந்தியைசத்தேடா அரணைவிலகடா வென்றசெல்லடா அவனைப்பணிய
டாதாளையணியடா அருகதுபோற்றடா கையணித்தேற்றடா மலரைத்
தூற்றடாமனதைத்தேற்றடா பிறவிமாற்றடா ஆனந்தக்கூத்தடாசொன
னேன், திருநாளைப்போவார் இந்தச்சேரிக்குமூருக்கு மாருக்கும்பெ
ரியவர்,

(திரு)

வசனம்,

இப்படிபெரியகிழவன் சொல்லக் கேட்டு நந்தனாலே கெடுக்கப்பட்ட பதினொருபேர்களுக்குள்ளே நீயும் பனிரண்டாம் பேராயிருக்கத்தலைபட்டு சிவசிவாவென்றுசொல்லிச்சேரியைக்கெடுக்கத்தலைப்பட்டீர்களே கிழவாவென்று மிகவும் துன்பமடைந்துபுலையர்ஒருவருக் கொருவர்சொல்லித்துயரப்படுகிறார்,

கீர்த்தனம்-இ-ம்-புன்னாகவராளி-ரூபகதாளம்,

பல்லவி.

நாமென்னசெய்வோம் புலையரே-இந்தப்
பூமியிலில்லாதபுதுமையைக்கண்டோம்

சரணங்கள்,

நந்தனொருவனாலேயிப்படி யாச்சு
நன்மையுந்தின்மையுமில்லாமற் போச்சு
சந்திக்குச்சந்திகூத்தாடிட லாச்சு
சாமியுமில்லாமல் எங்கையோ போச்சு நாம்
கண்ணாற்கண்டவ்வார்த்தைகேட் பாரோ
காதிற்பட்டாலதைகருத்திற்கொள் வாரோ
மன்னூர்சாமிக்குபூசைபோட் டாரோ
மாரியாத்தாளெங்கேமறைந்திருக்கி றாளோ நாம்
சேரிக்குள்பதினொருபேரோடுங் கெட்டான்
செய்யுந்தொழில்முறையாவையும் விட்டான்
ஊருக்குப்பெரியகிழவனும் கட்டான்
உண்மையறியாமல்சிதம்பரந் தொட்டான் நாம்

வசனம்,

சேரியில்துன்பமடைந்த புலையர்களைப்பார்த்து உங்கள் தெய்வத்துக்குவழக்கம்போலே பூசைபோட்டுபலியிட்டு வேண்டினால் சேரிக்கு நல்லகாலம்பிறக்குமென்றுபெரியகிழவனார் சொல்ல புலையர்கள் பூசைபோடுந்தெய்வங்களாவன,

அடுக்கா.

வீரன் இருளன் காட்டேரி வெறியன் நொண்டி சாமுண்டி தூறித்தூண்டி நல்லண்ணன் தொட்டியச்சின்னான் பெத்தண்ணன்மாரிமூனியன் சங்கிலியும் மாடன் கறுப்பன் பாவாடை மூறிக்காத்தான்குழியிரிசி மோகினி சத்தகன்னிகையும் சேரிமன்னான் மின்னடியான் சிறுகாட்டுடையான் பனமரத்தான் மாரியாண்டி வழிமறித்தான் மலையன் சாத்தன் பக்கிரியும் எரியுனுஞ்சிலம்பாயி இடையன் கல்லன் ஊமைபோடு விருங்கல்லன் பெத்தாச்சி வீட்டு தெய்வமுதலாயின,

வசனம்,

இதுகளைத்தெய்வமென்று வணங்கிக்கொண்டாட எனக்கோழிஆடுகளுடனேமதக்கூடம் வைத்துப் பள்ளயம் போட்டுபம்பையடிக்கவருந்தச் சன்னதம் வரும் சொன்னேன சேரிக்குநல்லகாலம்பிறக்கு மிதம்பரப்பித்து நந்தனாருக்குத் தெளிந்துவிடுமென்றும் பெருக்வாழ்வியென்றும் பெரியகிழவன் சொன்னானே அப்படியேகிழவன்சொல்லை நம்பிக்கைகொண்டு புலையர்களெல்லாரும் பந்தலிட்டு பள்ளையம் போட்டுகொம்பு தம்பட்டமுழங்கி மூப்பூசையிட்டு வேண்டுவார்,

வருந்திக்கொண்டாடும்-அகவல்,

புலையர்-எல்லைப்பிடாரியே எதிராகவந்துயெம்
கொல்லையுன்காவலாய்க் கொள்ளடி — யென்றார்
நந்தனார்-சொல்லினுமடங்காது சோதிபர்பரனைத்
தில்லைநாயகனைத்தேவ — ரறியாரோ
புலையர்-முண்டாசுகட்டிவரும் கொண்டிவீரப்பனைக்
கொண்டாடிப்பூசைகளைக்கொள்ளுவீ — ரென்றார்
நந்தனார்-அண்டங்கள்பதின்லுக் கப்பாலுமிப்பாலும்
நின்றார்க்குமுண்டாசுகிலையாது — வென்றார்
புலையர்-கச்சைசயபரிவார்வைத்த கருப்பண்ணசாமியை
இச்சையுடன்வேண்டியென்றெய்வ — மென்றார்
நந்தனார்-பச்சிலைபிடுங்கிப்பாதத்தில்சாற்றினால்
இச்சையானதுமீயுமென்றெய்வ — மென்றார்
புலையர்-ஈசமறிகோலமும் சிணமுன்னுசாவலும்
தீயகள்ளுநம்வைத்துத்தெரிசித்து — நின்றார்
நந்தனார்-வாயாலேசிவமென்றுவருந்திலேபோதும்
தாயாரைப்போலவேதழுவிவரு — மென்றார்
புலையர்-பித்துப்பிடித்திருக்கும் பேயனும்நந்தனுக்கு
சித்தந்தெளிந்திடச் செய்திடுவீ — ரென்றார்
நந்தனார்-பத்திவெள்ளம்பெருகிப் பாய்ந்தாலுஞ்சேரியில்
கத்தையுபிஞ்ஞஞ்சாதி நாடாது — வென்றார்

வசனம்,

இவ்வகையாகப் பூசைபோட்டுத் தெய்வங்களைக் கொண்டாடும்புலையர்களைப்பார்த்து நந்தனார் சொல்லுவார்.

விருத்தம்

இத்தனைநாட்பரமசிவன் றிருவடிமை யிராவுபகலெடுத்துச் சொன்னேனே, பத்திபுரிபெத்தனுக்கே யருள் புரிந்த வையனைப்பதும பணிவீரெனறேனெ அத்தனையுமிழந்திடவேமனமெழுப்பாயெந்தனையுபவமானித்தீர், புத்திசொல்வேனெனறவர்கள் மூழ்ந்தாவிட்டடி கொண்டுபுனேந்திட்டாரே.

கீர்த்தனம்-இ-ம்-தோடி-ஆதிதாளம்,

பல்லவி,

பத்திசெய்குவீரோ நடேசனை பத்திசெய்குவீரோ,

அநுபல்லவி.

அத்திமுகனைப்பெற்றஉத்தமனைவிட்—
கித்தியதேவரெவர்களுமில்லையென்று பத்தி

சரணங்கள்,

சாமமதர்வணமிருக்குஎசுர்வேதமுஞ்
சாற்றுமுபநிஷதமும்தற்பரனரனென்று
ஏமாறுமற்சொல்லியின்புறுதலையினாறு
எவர்களுமறியவேயிப்புவிதனினின்று பத்தி
ஆகமமிருபத்தெட்டாதபுராணமும்
அயன்கீதைமுதலான அனந்தஸ்மிருதிகளும்
பரமாகியபிரம்ஹம்பரமனொருவனென்று
பண்புடனுரைத்திடும்பான்மையதாலின்று பத்தி
கௌதமர்முதலானவிருடிகளனைவரும்
கரியமால்தொழும்பதங்கதியென்றனுதினமும்
புவனத்திற்போற்றியேயேற்றினதாலவர்
புகழும்புண்ணியபதமபொருந்தினரென்பதால் பத்தி
அரியயனிந்திரன்முதலானதேவரும்
அரனடிதனையேஅன்பாய்பூசித்தால்
பரிவுடனவர்செல்வம்பழுதுவராமலே
பாலித்தார்சிவனென்றுபத்தர்சொல்வதினாலே பத்தி
வியாசமுனிவரும்அவரடியார்களும்
விஷ்ணுபரமென்றுவிளம்பினதால்முன்னமே
கயாகாசிக்கங்கைக்கரையிற்கையிருந்தும்
கல்லாய்த்தானேயவாசமைந்ததினாலேயும் பத்தி
தில்லையம்பலத்தினில்திருநடமாடிடும்
தேவாதிதேவனைத்தினம்பணிந்தேத்தியே
அல்லலசம்சாரக்கடலினில்மூழ்காமல்
ஆனந்தக்கூத்துகளாடிக்கொண்டிருங்கள் பத்தி

விருத்தம்,

இத்தனைநாட்பரமசிவன் திருமகிமை யிரவுபகலெடுத்துச் சொன்னேன், பத்திபுரியெங்களுக்கேயருள்புரிந்தவையன்பதம்பணிவீரென்றேன், அத்தனையுமிழந்திடவேமனவெறுப்பாயெந்தனையுமவமானித்தீர்புத்திசொல்லுவேனென்றவர்களேமுழங்காலிற்றடிகொண்டடிபுனைந்திட்டாரே

நந்தனார்மகாபலசாலியானபடியால்புலையர்களைச்சிட்சித்துச்சிவநாமத்தைச்சொல்லச்சொல்லுவார்,

தண்டகம்,

| | |
|---|---|
| தத்திப்புலிப்போலேதாண்டிக் | குதிப்பார் |
| மூத்தமிடுவதைப்போலேமுகத்தைக் | கடிப்பார் |
| வார்கொண்டுகட்டிவளைத்துப் | பிடிப்பார் |
| மணிக்கல்லெடுத்தடித்துடைக்குள் | ளெரிப்பார் |
| பல்லார்சுரண்டியேபாம்படித் | திருப்பார் |
| கல்லாலெறிந்தாமவர்காயத் | படுத்துவார் |
| குப்புறத்தள்ளியேவைப்பினி | லுலைதப்பார் |
| சிவபரமென்றுநீர்சேவிப்பீ | ரென்றார் |

வசனம்.

இப்படிசிட்சித்தபின்பு புலையர்களெல்லோரும்நந்தனாரடிக்குப்பயந்துபத்திசெய்யத்தொடங்கினார்,

கடுக்கா:

| | |
|---|---|
| அரசரசிவசிவஅம்பல | வாணா |
| தில்லையம்பலதேசிக | நாத |
| புரமூன்றெரித்தபொன்னம்பல | வாணா |
| கரிபுரிபோர்த்தகருணா | கரனே |
| அனுதினமன்றினுளாடிய | பாதா |
| பிழைபொறுத்தாளும்புண்ணிய | மூர்த்தி |

வசனம்,

மூடப்புலையர்களுக்குப்புத்திதருவாயென்று அவர்களுமிப்படிச் சொல்லித்தொழுவார்,

கீர்த்தனம்-இ-ம்-எ அருகுலகாம்போதி-ஆதிதாளம்

பல்லவி,

பத்திகள்செய்தாரே பரமசிவ பத்திகள்செய்தாரே

சரணங்கள்,

பத்திகள்செய்தார்நற்றவம்புரிநந்தனார்
சித்தமகிழ்ந்திடவத்தனைபேர்களும் — பத்திகள்
எடுப்பான்சிவகதைபடிப்பான்தடியொன்று
பிடிப்பான்காலுக்கு அடிப்பானென்றே — பத்திகள்
கல்லாதவனிங்கேசெல்லாதவனறி
வில்லாதவன்வெகுபொல்லாதவனென்றே — பத்திகள்

வசனம்,

அந்தச்சேரியிலேபுலையர்கள் பத்திசெய்ததால் சேரிசிவலோகம்போலேவிளங்கியது சிலநாளுக்குப்பின்புபுலையர்களெல்லாருக்கூடி நந்தனாரைப்பணிந்து நல்லவார்த்தைச் சொல்லி நாங்களெல்லோரு

ம்காளொன்றுக்குமூன்றுவிசை சிவனேயென்றுசொல்லுகிறோம் மற்ற வேலையில்எங்கள்பண்ணைத்தொழிலே செய்வேனென்றுகேட்கநந்தனாரு ல்லது அப்படியேதப்பாமல் செய்யுங்களென்றுநந்தனார் சொல்லச்சேரி பெரியகிழவனுடன்இருப்புன்கூருக்குப்போய்வந்த பக்தி புரிபுலையர்கள் நந்தனைச்சுற்றிஅடிபணிந்துசொல்லுவார்.

எண்சீரடியாசிரியவிருத்தம்.

கொள்ளையெனும்பிறவிவினைமுளைவிசாமற்
  குடிமாறிப்போவதற்கோர்வகையைக்கேட்டு
கள்ளமனக்குரங்கதனுல்விடையமாச்சு
  கட்டியிருந்தாவிருந்த விருத்திபோச்சு
உள்ளங்கைக்குள்ளிருக்குங்கனியைப்போல
  உருவில்லாதான்மாவேராறுத்துவாழ்வீர்
எள்ளளவும்பிசகில்லையென்றுஞானம்
  ஏற்றுவார்மும்மலத்தைத்தூற்றுவாரோ

கீர்த்தனம்-இ-ம-எதுகுலகாம்போதி-ரூபகதாளம்.

பல்லவி.

பார்த்துப்பிழையுங்கள்-நீங்கப்- பார்த்துப்பிழையுங்கள்

அநுபல்லவி.

பார்த்துப்பிழையுங்கச்சனுக்குநந்தியை
எத்திற்தொழவேண்டாம்காற்றுப்போகுமுனனே (பார்த்து)

சரணங்கள்.

ஆத்மதிருடுங்கூத்தனிடமாய்ச்
சூத்திரதைதயிருக்ஷேத்திரத்துள்காடி (பார்த்து)
விற்றிருப்பிர்காலங்காத்திருப்பான்சிவ
சாத்திரத்தைநானேத்திரத்தாலுற்றுப் (பார்த்து)
மூலக்கனல்தாண்டிமேலக்கினைவந்து
பாலைக்குடியிருந்தாலுக்குள்வாராமல் (பார்த்து)
பாலகிருஞனைத்தொழுங்கோலக்கண்களை
மெலுசுக்குமேல்நாடிகாலக்கலியற (பார்த்து)

கீர்த்தனம்-இ-ம-யதுகுலகல்யாணி-அல்லது-சாரங்காரூபகதாளம்

பல்லவி.

தில்லைசிதம்பர மென்று-ஒரு
தாஞ்சொன்னல்பரகதி யுண்டுண்டு

அநுபல்லவி.

கல்லசுருதிமுடி கண்டு-சபா
நாதன்திருத்தாளைச்சிந்தையிற் கொண்டு (தில்லை)

சரணங்கள்.

வேரில்லாமலொருவிருட்சமொன் றிருக்கு
விளையும்வினைகளெல்லாமது செய்யுநதிருக்கு
பேரில்லாமல்ஞானத்தீகொண்டு கருக்கு
பேரின்பவாணையைப்பிசகாமல் செநக்கு(தில்லை)
தேசம்புகழுநதில்லைக்கோயில் வளாநது
தித்திக்குஞ்சைவபஞ்சாஞ்சரம் புரிநஅ
ஆசையுடனேயர்த்தஜாமத்தி விருநது
அக்கம்புளகிதமாயடிக்கடி பணிநது(தில்லை)
மாயன்கோபாலகிருஷ்ணன்தினந தேடி
வருநதுஞ்செநதாமரைமலரடி நாடித்
தாயைப்பிரிநதவிளங்கன்றுபோல் கூடித்
தனித்திருநது தாளம்போட்டுக்கொண் டாடி(தில்லை(

கீர்த்தனம்-இ-ப-கொள்ளிப்பந்து-ஆதிதாளம்

பல்லவி.

நமக்கினிபயமேது-தில்லை-நடராசரிருக்கும்போது

அநுபல்லவி.

மார்க்கண்டேயருக்காகமறலியையுதைத்தி...
மான்மழுவேநதும்மாதேவனிருக்க நமக்கினி

சரணங்கள்,

இம்மைமறுமைமுதலியாவுக்கும்பரமன்
சின்மயானநதரூபச்சிவபெருமானிருக்க நமக்கினி
அரியயனமரரும்ஆலங்கண்டஞ்சமுன்
பரிவுடனவரக்காத்தபரமசிவனிருக்க நமக்கினி
திரிவிக்கிரமனுப்வரும்திண்மாயன்மமதையை
விரிவுங்காளனுகிவிலக்கும்பரனிருக்க நமக்கினி
ஆதிசேடனுமானுமலரோனிலக்குமியும்
மாதலாய்த்தவஞ்செயக்களித்தபரனிருக்க நமக்கினி
இரணியனுல்வெறிகொண்டநரசிம்மனை
தரணியில்ரட்சித்தசங்கரனருகிருக்க நமக்கினி

கீர்த்தனம்-இ-ம-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

சங்கரனைத்துதித்தாடு-இனி-சனனமில்லையென்றுபாடு

அநுபல்லவி.

பொங்கரவணிநதிடுபொன்னம்பல வனை
புநதியில்நினைவாசப்போற்றுவாய் சிவனை

சரணங்கள்,

பாரினிற்பெண்கள்பேற் கருத்து-போய்ப்
பற்றவொட்டாமலே திருத்து
பேரின்பஞானத்தை வருத்து-சுகப்
பெருவெளிநெஞ்சி லிருத்து சங்கரனை
நீர்மேற்குமிழியிக் காயம்-என்றும்
நிலையில்லாவாழ்வீது மாயம்
பேரானமாலயன் நேயம்-பெறப்
பேசவதே யுபாயம் சங்கரனை
மனிதசனனத்தில் தேடு-நல்ல
மாதவத்தோர்களைக் கூடு
தனிவெளியாமொரு வீடு-தன்னைத்
தத்துவத்தால்கண்டு நாடு சங்கரனை

வசனம்.

இப்படிச்சொல்லியநந்தனாரைநோக்கி அவர்சொல்லுவார்

கீர்த்தனம்-இ-ம்-சவாயிநண்டகம்-சாப்புதாளம்.

அவர்கள் - புண்ணாகியவிந்தம்பிறவிப்பிணிக்குமருந்த
துண்ணுமனிருப்பதுமுண்மையோ நந்தா
நந்தனார் - கண்ணுலேபார்த்திடில்காட்டில்மறைத்திடும்
மண்ணுனபூதங்கள்மாயமே மைந்தா
அவர்கள் - இருப்பதுபொய்யெனறிராததுமெய்யென்றும்
இருத்திப்பேசியவகையென்னடா நந்தா
நந்தனார் - உருத்தெரியுதுநாமரூபமல்லவோ
கருத்திலிருத்திக்கொண்டால்காணலா மைந்தா
அவர்கள் - விஸ்தாரமாமிர்தபிண்டமானமத்தை
யத்திக்கொண்டிருந்ததுபகர்ந்திடும் நந்தா
நந்தனார் - வித்துக்குள்விருட்சமடங்கியவாறுபோல்
சத்துக்குள்ளண்டசராசர மைந்தா
அவர்கள் - புத்திக்குளெட்டாதபோதத்தைநாமுண்டு
முத்திபெறும்வழிமொழியுமே நந்தா
நந்தனார் - அததனிருக்குமிடமனமாயாதிகள்
பதறுதலில்லாப்பரவெளி மைந்தா
அவர்கள் - தத்துவங்கள்தொண்ணூற்றாறுங்கடந்திடும்
வஸ்துவைநாமெண்ணும்வகையேது நந்தா
நந்தனார் - சித்திரையெழுந்தபினனினைவுடனேகூடி
உத்தாரம்பேசியேதுண்மையே மைந்தா
அவர்கள் - பித்தனைவேறொருபேய்பிடித்தாற்போலுஞ்
சித்தவிகாரங்கள்தெளியுமோ நந்தா

நந்தனார் - பத்திவலைவிசிப்பார்த்திடும்வேளையில்
தத்திக்குதித்திடுதாண்டவ — மைந்தா
அவர்கள் - சிலநாளாநல்லசேதிசொன்னாயுந்தன
காலுக்குக்கும்பிடக்கண்டோமே — நந்தா
நந்தனார் - பாலுக்குச்சர்க்கரைபலித்ததுபோலுங்க
ளாசையனைத்திருவீகோடாது — மைந்தா
அவர்கள் - தூலசரீரத்தைச்சுமந்தபிள்ளைபூச்சி
போலேயானோமுந்தனபுண்ணிய — நந்தா
நந்தனார் - பாலகிருஷ்ணனைதொழும்பரமசிவனரு
ளாலேபொங்கிவருமானந்த — மைந்தா

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஓங்காரமெனுஞ்சொல்லுமுரலைப்போட்டு
உறுதியெனுமிருப்புலக்கைகையிலேந்தி
வாங்காரமெனறதட்டுவாகையிட்டு
வடிக்கடியேசண்ணியதைப்புடைத்தெடுத்து
நீங்காதசிவயோகநிஷ்டைகொண்டு
நிர்மலதாயவருஞ்சற்றிவந்து
பாங்கானநந்தனிருதாளைப்போற்றிப்
பணிந்திட்டார்திருப்[illegible]கிரி.

வசனம்.

அவர்கள்நந்தனாரைவிட்டுநீங்கி தனித்திருக்க மனம்வாராமல்சொல்லுவார்.

விருத்தம்;

தில்லையிற்போகவேண்டாம்திரும்பிவந்தாலுமுமைச்
சொல்லாதபண்ணைப்பார்ப்பான் சினக்கொண்டடியாவிக்த
எல்லாமிவிருக்குதானே யீசனார்திருநாமத்தைச்
சொல்லியோதலாம்வீட்டிற் சேருவோம்வாரீரென்றார்

வசனம்.

அனல்கண்டமெழுகதுபோலுருகிப்பத்திவெள்ளம்பெருகிச்சொல்லியபேர்களைகரவாவிநயனமபண்ணிகண்ணீர்சலம்பெருகச்சொல்லுவார்.

கீர்த்தனம்-லாவணி-ஆதிதாளம்.

தில்லைவெளியிலேகலந்துகொண்டவர்திரும்பியும்வருவாரோ
எல்லைகண்டபேரினிப்பிறவாரென்றியம்பவதறியாரோ
பெண்டுபிள்ளைகள்வெறுங்கூட்டமதுபேய்ச்சுரைக்காய்த்தோட்டம்
கண்டுகொள்வார்பெரியோரறிவிற்கனகசபையிலாட்டம்
அருவாகிலாயில்தெரிசனங்காணத்தேடித்திரியாரோ
திரிதாகியலிங்கமாலுடங்கிடைத்தாலானந்தமடையாரோ

குஞ்சிதபாதத்தைகண்டாலொழிய குறையதுநீங்காதே
சஞ்சிதக்குமராதிகளோடாடியசடலமுந்தாங்காதே
சேரியிடையிலேகுடியிருந்தாலிந்தச்சென்மமுந்தொலையாதே
சிதம்பரம்போவேன்பதம்பெறுவேன்தடைசெய்வதுமறியாரோ
இரவும்பகலுமொழியாக்கவலையிருப்பதுசுகமோடா
இன்னம்பெருகும்பரமானந்தவெள்ளமிழந்துநீபோடா

வசனம்.

சிதம்பரம்போவேன் நீங்களிங்கே இருங்களென்று நந்தனார் சொல்லுவார்,

கீர்த்தனம்-இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்

பல்லவி:

சிந்தனைசெய்துக்கொண்டிருந்தாலுங்களுக்
கெந்தவிதமுங்கரையேறலாம்சிவ — சிந்தனை
அந்தணமுனிவந்திரனமாரும்
வந்துபணியுமரவிந்தபொற்பாதத்தை — சிந்தனை
மாமனைவதைத்தவன்காமனையெரித்தவன்
மான்மழுதரித்தவன்தாமரைப்பாதத்தை — சிந்தனை
தம்புருவணிந்திடுந்தும்புருநாரத
ரும்பணியும்பொன்னம்பலவாணனை — சிந்தனை
வெம்பியதம்பிக்கருளியபாலகிருஷ்ணன்
பணியுந்திருவம்பலநாதனை — சிந்தனை

கீர்த்தனம்-இ-ம்-பூரிகல்யாணி-அல்லது-சாமராகம்-ஆதிதாளம்,

பல்லவி.

தில்லைத்தலமென்றுசொல்லத்தொடங்கினு
வில்லைப்பிறவிபிணியும்பாவமும்

அநுபல்லவி.

சொல்லுக்குமிதுவேசிவலோகம்
எள்ளத்தனையறஞ்செய்யில்மோகம் — தில்லை

சரணங்கள்,

ஆகமவேதபுராணங்கள் — சாத்திர
மருந்தவம்புரிவாற்கருளிய — பாத்திர
மாலயமாயிரத்தெட்டினி — னேத்திர
மானந்தத்தாண்டவமாடிய — க்ஷேத்திர-தில்லை
கணத்திலாடுமணிபாதி — சித்தியுங்
சாத்திலாருஞ்சின்னடர்கள் — வெற்றியும்

இணையில்லாத குருசாஸ்திர பத்தியும்
இசைத்திறமுனை வருஞ்சிவபத முத்தியும் (இல்லை)
பரமரகசியமென்று பார்க்கலாம்
பாலகிருஷ்ணனைக் கவிபாடிக் கேட்கலாம்
கருமவினைகளடங்காமற் போக்கலாம்
கசடர்கட்கு முத்தியுமுண் டாக்கலாம் (இல்லை)

வசனம்

நந்தனார் ஞானவுபதேசஞ்சொல்லக் கேட்குமுன்னே நந்தனாருடன் திருப்புன்கூரிற போய் சிவதரிசனஞ்செய்துவந்தவர்களாகிய அறவன் தொந்தி-ஆனையேறி-முத்துமாறி-கழனி-காத்தான்- பாச்சலூரான்-ஆண்டி-சேவகன்-சொரியன்-வெறியன்-காணியான்- எல்லைக்கறுப்பியென் கிறபெரியகிழவரிந்த ஆறுபேர்களுமானந்தமடைந்து அவரவர்கள் வீட்டையிலிருக்கசகிக்கத் தொடங்கினார் பற்றப்புலையர்கள் கூட்டங்கூடி நந்தனார்நம்மை நாமொன்றுக்குமொன்றுக்காக சிவநாமத்தைச் சொல்லச் சொன்ன குற்றத்தைப்பாராட்டி நந்தனையடிமைகொண்ட அந்தணனிடத்திற்சொல்லுவார்.

விருத்தம்.

இரவுபகலபயமசிவனிணையடியே தொழுதிருக்குமின்பங்கூறிக், கரைபுரண்டோடலைப்போற சிவத்தினிடைக் கருத்துரைக்கக்கண்டெல்லாரு மபரவிவரும்பலையர்களும்பண்புறவே நெறிகாட்டிப்பகரக்கேளீர், அரிமைத்தாருநந்தனவனடிமைபுரியந்தணர்பாலறிக்கைசெய்வார்.

நொண்டிச்சிந்து-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

ஐயே ஒருசேதி கேளுங்க உங்கள் அடிமைக்காரப்பறையனுடைத்தை யெல்லாம்வரவரக்கெட்டுப்போச்சு-சேரியில்வழக்கமில்லாதபடி பழக்கமிட்டான்குடியிருக்கமாட்டோம் எப்போதும் கூர்குரல போடுவனுக்க மறந்தே இப்பாலொருவேளை கொள்ளாத ஏக்கமடைந்தவன்போல நாக்கைவளைத்துச் சிரிப்பானொருவேளை இல்லைச்சிதம்பரமென்று சொல்லி யழம்பித்தே அழைப்பானொருவேளை எங்களையும் அண்ணைவரவென்றுசொல்லி கின்னாரங்கொட்டி குதிப்பானொருவேளை திங்குருக்கல கொண்டவன்போலெழுந்தோ கண்டவன்போலகளிப்பானொருவேளை மரம்போலேநிலைக்கக்கல் காலைசைக்கல்மெய்யசைக்கவும் இருக்கானொருவேளை தாளம்போட்டெக்கலிகொட்டியே குடிசைக்குட்புகுந்துபேசாதொருவேளை கண்டதெல்லாம்பிரட்டென்று சொல்லுவான் மூட்டித்தனமமன்னருசாமி போலேகிளம்பி வாய்விட்டலறுங்குரலோடடேயே ஐயோசிவனேயென்பான் கீழேபுரண்டழுவான் யாரையுந்தொழுவானே தாண்டினது போலே அஞ்சிநஞ்சி ஆடிப்பான்

பறக்களைக்கடிப்பானேசிவனென்றுமூன்றுதரங்காங்களுக்குச்செப்பவேணு மல்லாவிடில் வைப்பிலுதைப்பான் கோயிலிற்போவோமென்பான்எங்க ளையும் கும்பிடச்சொல்லி யில்லா வம்புபண்ணுவான் சுற்றிவரச்சொல் லியடிப்பான் சிவன் பேரைச்சொல்லடா சந்நிதியில் நில்லடா வெனடா ன்சொல்லித் தலைக்கு வேணும் இல்லாவிட்டால் சக்குமாகுடி கொசன் டுநோக்கி விடுவான் கொம்பேறி மூக்கன் போலே மூக்கினிற்குத்துவா ன்புலிபோலே தத்துவானே இதுவென்ன காரணமோஎங்களுக்கினபா யிருக்குது பாணமல்லவோ கறுப்பண்ணசாமி காளிஇருளன் காட்டே றிவீரனிவன் விட்டேறியோ பாவாடை அணைதானோரண பத்திர காளி யோ வுன்மத்த வீரனோ பூசைகள் போட்டுப் பார்த்தோம் ஒன்றிலும் போவதில்லை காரிய மாவதில்லையே எங்கள் வள்ளுவனைக் கேட்டோம் அவர் எடுத்துச் சொன்னாரிதை விடுத்துச் சொன்னார்மயான உருத்திர னார் பிடித்து வாட்டு தடாயிப்படியாட்டு ரென்றார். தெளியாதென்று சொன்னா ஐயேதெளியா தென்றுசொன்னார்,

கீர்த்தனம்-இ-ம்-கனடையாரு-ஆதிதாளம்

பல்லவி.

செதிசொல்லவந்தோம்-நந்தனார்-செதிசொல்லவந்தோம்

அநுபல்லவி.

சாதிமுறைமைதெரியாதவனுமக்குத<br>
வாதவனெனவெருருமாதமாயத்தெரிந்த — செதி

சரணங்கள்,

ஏரைப்பிடித்துச்சற்றே — யழுவான்-மன<br>
தேங்கித்தள்ளாடியே — விழுவான-எங்கள்<br>
சேரியைப்பார்த்தே — யழுவான-சிவ<br>
சிதம்பரமெனறே — தொழுவானையே — செதி

நாத்துமுடியைக்கையி — லெடுப்பான-அதை<br>
நடத்தெரியாமலே — விழிப்பான-இதைப்<br>
பாத்திடும்பேர்களைப் — பழிப்பான-அடே<br>
பாவியெனறெங்களை — யடிப்பானையே — செதி

உதட்டையசைத்துமுணு — முணுப்பான-அவன<br>
உளறுறக்கத்தையுந் — துறப்பான-நாங்கள்<br>
அதட்டிடிபபேசின — லடிப்பான-பொன<br>
னம்பலவாணனைப் — படிப்பானையே — செதி

கீர்த்தனம்-இ-ம்-கமாசு-ஆதிதாளம்

பல்லவி.

அடக்கியாளுமையே-இவனை-அடக்கியாளுமையே

அநுபல்லவி,

அடக்கியாளும்பிசகத்துடுக்குக்காரனிவனை
யடித்துப்பிடித்துக்கண்டித்துப்படபடத்து அடக்கி

சரணங்கள்.

பொன்னம்பலவாணனென்றிவன பேசி
பொழுதுபோக்குவானசாம்பலைப் பூசி
சன்னதங்கொண்டவனைப்போலவே வாசி
சண்டைபிடிக்கவருவானிவன தோஷி · அடக்கி
பனித்துறைகையேயொருமந்திரம் போட்டான
பழமையானபிணிகங்களைக் கூட்டான
குலத்தைத்கெடுக்கவந்தானிவனொரு கோட்டான
கோபக்காரனெங்கள்வழிப்பட மாட்டான அடக்கி
குளத்தைத்வெட்டச்சொல்லிக்கூலியைக் கொடுத்தான
கூட்டிக்கொண்டுபோய்ப்பயல்களைக் கெடுத்தான
களத்தைதரிக்கவேயெங்களை விடுத்தான
காடுமண்டிவருஞ்சுடலையிற் படுத்தான அடக்கி

வசனம்.

சேதிசொல்லவந்தபுலையர்களைப்பார்த்துவேதியர்சொல்லுவார்

விருத்தம்,

காலமேவந்தானிங்கே கள்ளக்கும்பிடுகள்போட்டுப்
பாலனைப்போலேபேசிப் பசப்பினன்போடாவென்றேன்
வேலைக்குழலிசிக்க வீணனைப்போலேகாணேன்
சீலமாஞ்சிதம்பரத்தைச்சேரவேவிடைகொடேனே,

வசனம்

அந்தணர்சொன்னமொழியைப் புலையர்கள்கேட்டுமிகவுஞ்சந்தோஷங்கொண்டு சேரிவந்து சேர்ந்தபின் நந்தனாரெப்போதும் போலே அந்தணரிடத்தில் வருகிறார்,

துக்கடா-ஆதிதாளம்

நந்தனாரும்வந்தார்வெகு
சொந்தமானதங்களையாளக்கான நந்த

அங்கமுழுதிலும் நீறு பூசியே / அரகர சிவசிவவென்று பேசியே
சங்கையாருக்கிருக்கைகள் வீசியே / சாமி சாமியென்று தன்னை யேசியே
தில்லைச்சிதம்பர பள்ளு பாடியே / தெரிசனங்காணேனென்று ஆடியே
அல்லலறு சிவலோகந் தேடியே / படையுவேறுமென்றிக் கோடியே

நந்தனார் நடந்தார்

விருத்தம்.

சாதிகுலம்பிறப்பென்னுஞ் சந்தேகமெனுமியாறு தாண்டிப்போயிற்கும்
பேதகுணம்பற்றறவே அப்பேரின்பம் வருவித்துப் பேணிக்காக்கும்
ஆதிபராபரனைத் திருச்சிற்றம்பலத்தைத் தக்கண்டுய்வி னென்ன
வேதமொழிவிளங்கிய திருவாயால் விண்டுகொடுத்தருளிச்செய்தார்.

கீர்த்தனை-இ-ம், உசேனி-ரூபகதாளம்.

தில்லையம்பலத்தலமொன் / றிருக்குதாம்-கண்டபேர்க்கு
செம்பொனணிமணிமயம் / கருக்குதாம்
உபரிந்தசொக்குடபல / தெரியுதாம்-கண்டபேர்க்கு
உள்ளங்குளிரக்கருணை / புரியுதாம்
பன்னகாடன்மாதவம் / தேடுமாம்-தில்லைக்காட்டில்
பாம்புபுலிக்கெதிர்த்த / மாடுமாம்
அரிபிரமனெழுத்தத / தள்ளுமாம்-அனையுமது
ஆக்கநடனக்காட்டிக / கொள்ளுமாம்
போய்வருபவர்புண்ணிய / சாலியாம்-தருமராசன்
புத்தியில்லாதவர்க்கு / கேலியாம்
உருவில்லாதகுருந்தவாகீ / திருக்குதாம்-மூலக்கனலை
வழிவெருப்பிக்கனைப் / பெருக்குதாம்
உருவமாயிகெனிசே / வருகுதாம்-நான்மறைக்கு
அமரர்கிலாதகாட்டு / தருகுதாம்
போய்வருகவுத்தரக் / தாருமே-பொன்னம்பலத்தான்
கோர்த்துப்பேணகண்ணுறுவே / பாருமே (தில்லை)

வசனம்.

சிதம்பரம்போவேனென்று அந்தணர்கேட்கும்படி நந்தனார் சொல்லுகிறார்.

கீர்த்தனை-இ-ம், சுருட்டி-ஏகதாளம்.

தாகதிமிடதகசங்கரிமாதுபாகதிமிகிடதகஜெக்கதிமிதகதிமிதகசக்கரி குக்குமி தகதக ஜெணுதனகனகனக் ததைத்தனக்தசனத்தனத்திமிருகுமிய டதகதோதகதத்திமிகுமிடதகதோதகதத் திமிகுமிடதகதோம்.

பல்லவி.

ஆடியபாதத்தைக்காணேனோ பிரமாநந்தம்பூணேனோ.

**அனுபல்லவி.**

நாடுந்தைப்பூரணபூசத்திலே தில்லை
நாயகனார்குருவாரத்திலே மன்றுள் (ஆடிய)

**சரணங்கள்.**

பரசமயத்துடன் வாசியொடுக்கி
பத்திபண்ணுங்காட்டில் பாம்புபுலிக்கி
ஆசையுடனே யருளைப்பெருக்கி
அன்பர்களிக்கச் சிலம்புகுலுக்கி (ஆடிய)
கொட்டமளிக்கும் புலன்தொழில்நீக்கி
கோடிகாலஞ்செய்த பாழ்வினைபோக்கி
வெட்டவெளியிலே நெட்டிடத்தூக்கி
வேதம்பணிந்திடத் தென்முகம்நோக்கி (ஆடிய)
சேனுஞ்சடைப்புனல் பூமியிற்சொட்ட
சேவித்தநாதர் பாடியேபெட்ட
கோணங்கிழிந்தவண்ட கோனாருநட்ட
கோபாலகிருஷ்ணனு மத்தளங்கொட்ட (ஆடிய)

**வசனம்.**

ஆனபடியினால் நான் சிதம்பரம்போக உத்தாரவுதரவேணுமென்று அந்தணரைத் திருநாளைப்போவார் கேட்கிறார்.

**கீர்த்தனம்-இ-ம-தேசிகதோடி-ஆதிதாளம்.**

**பல்லவி.**

உத்தாரந்தாருமையே-எனக்
கொருவருமில்லைபாகதியடைய (உத்தாரந்)
வித்தைகள்கற்றதுமில்லை-யாதொரு
பத்தியிற்சென்றுபாகதியடைய (உத்தாரந்)
குற்றங்களெத்தனைகோடியேன்செய்தேன்
அத்தனையும்பொறுத்தாதரவாக (உத்தாரந்)
பெண்டுபிள்ளையென்றுபேயனைப்போலவே
கண்டுகளித்துக்காலங்கழித்தேன் (உத்தாரந்)
தில்லைச்சிதம்பரத்தைதெரிசித்துலக்குங்க
னெல்லையைக்காத்துக்கொண்டிருக்கிறேனையே (உத்தாரந்)

**வசனம்.**

நந்தனார்சிதம்பரம்போக உத்தாரவுகேட்டதனால் வேதியரடிமையைப்பார்த்துச் சொல்லுகிறார்.

**விருத்தம்.**

படிபுகழ்தில்லைநாதன் பத்தியேயுருவாய்வந்து
கடிநகராதனாரின் களித்திடுநந்தனென்று

இதுசிறுமந்திகாட்டிச் சிக்கவிட்டப்போலேயென்றக
குடிகுடித்திடவேஞாயங் கோவியும்பேசுவானே.

கீர்த்தனம்-இ-ம், தண்டகம்-ஆதிதாளம்.

சேரிமுற்றுஞ்சிவபத்திபண்ணும்படி.
விட்டையாமநாவிட்டையாம்
சேதிசொல்லவேணுமென்றிலகேசீ
வாதையோஅகாசிழ்ந்தையோ
காலைமாலையில்வந்துதெரிசனங்
காட்டுறாய்விளாட்டுறாய்
கதிரோனுமூர்க்குருவிசருடன்போ
னாருமோவதிவேகமோ
அடிமைமேலேசெய்யுமுனக்கிக்கக்கொண்
டாட்டமோசெனக்கூட்டமோ
அடக்கியாளமாட்டேனேரிங்கக்குட்டி.
யல்லவோவதைசொல்லவோ
காளிபூசையவர்போகும்போதுநீ
கண்டித்தையாநதெண்டித்தையாம
கபடமெல்லாம்வெளிப்படுவதாகவழி
காட்டுகிறேனதைநாட்டுகிறேன்

வசனம்.

நந்தனர் சிதம்பரம்போறேனென்று சொல்லுவதால் அந்தணர் கண்டிக்கிறார்.

கீர்த்தனம்-இ-ம், ஸாகஸரி-ஆதிதாளம்.

பல்லவி.

பறையாநீசிதம்பரமென்றுசொல்லப்
படுமோடாபோகப்படுமோடா-அடே (பறையா)

அநுபல்லவி.

அரியாத்தனமிணிசொன்னுலினிமே
லடிப்பேன்கூலியைப்பிடிப்பேன்-பாவி (பறையா)

சரணங்கள்.

சிதம்பரமென்பதை விடு-கொல்லைச்
சேரிப்பிலேவந்து வடு-நாற்றைப்
பதத்திலேபிடுங்கி நடு-கழுப்
பணணுக்கேபலி கொடு-அடா (பறையா)
எப்போதுமொருதடி பிடி-கைபி
சேடுத்துக்கொண்டேதழுக் கடி-உள்ளங்

| | |
|---|---|
| கர்ப்பிணியாம்பள்ளு | பாடி-கால் |
| கோகாமலேகாடியைக் | குடி-அடா (பறையா) |
| கள்ளாந்திருசற்குப் | பாரு-உன் |
| கால்படும்பணிணையிற்வீற் | றிரு-இது |
| சொன்னதுமில்லையோஉன் | குரு-நீ |
| சுகமுடன்வாழ்ந்துகொண் | டிரு-அடா (பறையா) |

விருத்தம்.

ஓதியபடிவீராவென்றும் உக்கிரமாடாவென்றும்
பதிபெறுங்கருப்பாவென்றும் பாவாடைராயாவென்றுங்
துதிபெறுமிருளாவென்றுந் தோட்டியச்சின்னனென்றும்
மதுவொடுபிசிதம்வைத்து வருநதியேவணங்குவாயே.

வசனம்.

அந்தணர் நந்தனரைக்கண்டித்து மறுபடியும் நல்லவார்த்தைசொல்லுகிறார்-

கீர்த்தனம்-இ-ம்சலாவளி-ஆதிதாளம்.

பல்லவி.

நந்தா-ஒருபிசகிசொல்லுறேன்கே
ளிந்த பங்கு[illegible]
சொந்தபூமியெழுதிக்கொடுத்தநீ
வந்த-பறையனல்லவோமறந்தாய். (நந்தா)
பாரு-இந்தவயல்வரப்பைவெட்டிப்
பேரு-அங்கக்கழனியைவெட்டிப்பனை
சேரு-பொறுப்புள்ளவனுனையன்றி
யாரு-இதுவல்லவோகாரியம். (நந்தா)
வாடா-உன்கடமையைமுழுதாக்தா
வோடா-பண்ணைப்பறைச்சிகளுடனே
கூட-பழனங்கட்டோரம்கூடப்
போடா-இதுவல்லவோபுண்ணியம். (நந்தா)
பாடு-உன்கருப்புதெய்வத்தைக்கொண்டு
டாடு-கள்ளுகள்ளுடன்பூசைகள்
யோடு கெலவிளையும்படிக்குவழி
தேடு-புத்திசொன்னேனறிதாண். (நந்தா)

வசனம்.

வேதியர் நந்தனரைச் சிதம்பரம் போகாதேயென்று கண்டித்துச் சொல்லுகிறார்.

கீர்த்தனம்-இ-ம், நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரம்போகாதே-சொன்னேன்-சிதம்பரம்போகாதே

அனுபல்லவி.

சிதம்பரம்போனால்-இகம்பெறலாமென்று
சேதிசொல்லாருமுன் ஜாதிக்கடுக்குமோ. (சிதம்பரம்)

சரணங்கள்.

கள்ளக்குடிகளைப் போடாதே-உன்
கபடமெல்லாமிங்கே காட்டாதே
மெள்ளச்சொல்லடா முழுமூடா-இழ
தள்ளிவிட்டுஉன்னைத் தரும்படிசெய்வேன் (சிதம்பரம்)
நாற்றைப்பிடுங்கிக்கழனி நடவேணும்-அந்த
நஞ்சைவயலைச்சற்றே யுழவேணும்
பாரத்தைப்பார்ப்படித்து பழுதுவராமலே
பாயுஞ்சலம்விட்டுப் பார்த்திடுவாய்நீ (சிதம்பரம்)
அடிக்கடிமறந்தானால் சொல்லவோ-நீ
அடிமைக்காரப்பய லல்லவோ
எடுத்துக்காட்டுவே விருக்குதுசாதனம்
தடுத்துப்பேசினால் தாடையிலடிப்பேன் (சிதம்பரம்)

வசனம்.

அந்தணர் கண்டித்துச்சொன்னதால் நந்தனார்துயரமடைந்து சேரியில்வந்து சிவனைநினைத்து பக்திபுரிந்துகொண்டாடுகிறார்.

கீர்த்தனம்-இ-ம், கண்டகம்-ரூபகதாளம்.

பல்லவி.

பத்திபண்ணிக்கொண்டிருந்தால்-முத்திபெறலாமே.

அனுபல்லவி.

எத்திசையுமெவ்வுயிர்க்கு மவ்வுயிராய் நிறைந்திருக்கும்
வஸ்துவென்று அம்பலவாணன் பாதமடிநினைந்தோதும் (பத்தி)

சரணங்கள்.

கட்டழகிகோரணிடம்நாதலது போல
கடுகிவருங்கன்றுருகிக்கிடைகளிலோடி போலே
கட்டவளைத்துவரியுபின்னைப்பேதையோருக் காலே
காவலனும்பக்கம்வருகில்கனிப்பகளைப் போலே
கன்றிறுமைக்கூடிகைகைவிடப்பிரியாமற்றுமக்கங்
கற்பனையாகிப்பிரபஞ்சசொற்பனம்போலொப்புமிரும் (பத்தி)

தாயெடுக்கில்பால்குடிக்குங்குழவிகள்திருஷ் டாந்தம்
சட்டெனப்பொருந்தாமல்துயர்தருமிது மேகாந்தம்
ஆயிருந்தவழுத்திலிந்தமாயையுப சாந்தம்
ஆறுமென்றுசாதனங்கள்வழங்குது வேதாந்தம்
காயருசனிக்கா இருக்கக்கண்டுகொள்ளவேணுமென்றால்
காசுபணம்பாசமதுமாசறவே ரேசருகின் (பத்தி

பச்சைமரத்தாணிபோலேபரிந்துமனோ நாடி
பாலகிருஷ்ணன்பணியும்பொன்னம்பலவாணனைக்கொண் டாடி
இச்சைபொழிந்தைம்புலன்களொடுங்குதுகளும வாடி
ஏகாசமானபரிபூரணத்தைத் தேடி
அச்சமறத்திருவிழியிலானந்தநீர்மழைபுரள
அரனேதிரிபுரனேகங்காதரனே பராபரனேயென்று (பத்தி

வசனம்.

சேரியில் சிவபத்திபண்ணிக்கொண்டிருக்கின்ற பன்னிருபேர்களுடன் நந்தனுமிருந்து பக்திபண்ணும்நாளையில் ஒருநாள் நந்தனார்பன்னிருவருடைய பக்தி திடப்பட்டதோ இல்லையோவென்று அறியப் பரிட்சைபார்த்தார்.

இருச்சொல்லலங்காரம்.

நந்தனார்-சிவதலத்தின்சிதம்பரமேகாட்சி யென்றார்
அவர்கள்-அனித்தைகளைத்தாண்டிநிற்றலேகாட்சி யென்றார்
நந்தனார்-சிற்சபையின்மகிமையென்னசெப்புவீ ரென்றார்
அவர்கள்-துச்சுத்துக்காணுதவனந்த மென்றார்
நந்தனார்-ஆத்மைகாணிலென்னபலனது மென்றார்
அவர்கள்-காக்கத்திருவேசிவகாமகவிது மென்றார்
நந்தனார்-கற்றதனாலென்னபலன்கண்டா மென்றார்
அவர்கள்-கொற்றவடிமைக்காரன்பலன்கொண்டோ ரென்றார்
நந்தனார்-அம்பலத்தைத்திசைபோடத் தொடங்கினாரே
அவர்கள்-சம்புவித்தைதாமயக்கு ளடங்கினாரே
நந்தனார்-மனத்திருத்திக்கொண்டார்க்குவாரதொன்றில்லை யென்றார்
அவர்கள்-கனவருக்கமுண்டாக்குங்காராதொல்லை யென்றார்
நந்தனார்-சாதியிலேயெளியவன்தானறிவேனோ வென்றார்
அவர்கள்-ஆதியிலேபேதமில்லையறிவீரே யென்றார்
நந்தனார்-ஞானமில்லாதவர்முத்திகேடா ரென்றார்
அவர்கள்-ஞானமில்லாச்சிவபக்திகேடா ரென்றார்
நந்தனார்-மதியில்லாதவர்களுக்கெல்லாம்விதியே தென்றார்
அவர்கள்-கதியில்லாதவர்க்கெல்லாங்கதியே தென்றார்

நந்தனார்-பவக்கடலைக்குளப்படிபோற்கடப்பா ரென்றார்
அவர்கள்-அக்கடலிலிளைப்பாறிக்கிடப்பா யென்றார்
நந்தனார்-பாப்பாறுத்தாரங்கொடுப்பாரே மென்றார்
அவர்கள்-காப்பாற்றுங்கடவுளுக்குக்கைப்பார மென்றார்
நந்தனார்-படித்தாற்போற்காட்டிவிட்டேன்பலமாச்சுதென்று சொன்னார்
அவர்கள்-அடித்தப்பால்போட்டுவிட்டோராலேயாகு மென்றார்
நந்தனார்-அங்கேயேநீங்களல்லீரே வென்றார்
அவர்கள்-இங்கேயேனேதுதிக்கலேயோ வென்றார்
நந்தனார்-எங்கும்நிறைந்தபூரணங்க ளென்றார்
அவர்கள்-இங்குமிருக்கு இயற்றுங்க ளென்றார்

வசனம்.

இப்படியிருக்குங்காலத்தில் ஒருநாள் தனக்குத்தானே பரவசமாய் ஆனந்தக்கண்ணீர்பெருகிப் பாடுவார்.

கீர்த்தனம் ௰ம், செஞ்சுருட்டி - ஆதிதாளம்.

பல்லவி.

பாடுவாய்மனமே - சிவனைக்கொண் - டாடுவாய் தினமே
இந்திரன்முதலிய இமையவர்க்குபகார
நந்தியின்மீதேறும் நம்பன்பதம்போற்றி (பாடுவாய்)
ஆனந்தனையுண்டமாணிக்கமாத்திரு
நீலகண்டன் கழல்பெறு செறிவுடன்போற்றி (பாடுவாய்)
சீலமுடனமர்ந்தநிதினின்றுதிரு
சூலபாணியெனுஞ்சுயம்புதாள்போற்றி (பாடுவாய்)
மோகமாந்துன்பத்திலுஞ்சூழ்ந்திடாமல்
ஆகமநூன்முறையிடுமுத்திலவன்றனைப்போற்றி (பாடுவாய்)
பஞ்சாட்சரந்தன்னைப்பக்தியாயுருவேற்றி
மெய்ஞ்ஞானம்பெற்றுய்யுமேகனைநீபோற்றி (பாடுவாய்)

கீர்த்தனம் ௰௧ம், தோடி - ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரமேகினைமனமே முத்தி பதம்பெறலாகுமனமே

அநுபல்லவி.

சதம்சதமென்னும்பொருள் பதம்பரம்மய மருள்
சமரகடம்புரிசாமிசிதம்பரவிமலன்றிருவுருவீகொள்ளாகர. (சிதம்)

சரணங்கள்.

ஒழியாக்கவலைகொண்டுவிழலாய் - ஆனாய்
உண்மையில்லாவிட்டுநிழலாய்

கழைகாதிருக்கதில்லைக்கலகமெனுமேல் வீட்டை
சார்த்தாலல்லோநல்லசாயல்லவாம் பாட்டை
சந்ததமும்பெற பந்தமுமேயற
எக்கவினைத்திற சூக்ஷும்முற (சிதம்)
தேகமெடுத்தவருண்மையறியாய்-மோசத்
தெரிசனையர்வலைக்கிழுத்தியாய்
சாகுமட்டுஞ்சமசாரமே வீடு
சகியாமலேயுழைத்துச்சண்டாளமாக காடு
சம்பாத்தியமதா கம்பாருப்விதி
நம்பாதிக்கதி தெம்பாயபதி (சிதம்)
உனக்குள்ளேபுணர்வாய்நீமோனம்-உண்மை
ஞானவழிகாட்டுமே ஞானம்
தனக்குச்சிதம்பரஞ்சார்ந்தாலே தன்மயம்
சத்தியமாய்க்கூடும்சாமியோச்சிய சின்மயம்
சரிவரவினைக்குரு வசமயமாய்வரு
முருவெளிசெயனுமொரு பொருளதுவாகதிரு (சிதம்)

தொக்கடா.

அர அர அரமகாதேவா
சிவகாமிநாதா தில்லையில்வாசா

வசனம்.

நந்தனார் சிவநாமஞ்சொல்லி அழைப்பிக்கொண்டு அந்தணரிடத்தில் வந்து சிதம்பரம்போக உத்தாரம் மிகவும்வருந்திக்கேட்கிறார்.

இது அறுசீரடி விருத்தம்.

வேதியரேபெரியவரேநல்லவரேநான்கடையன் வினையோர்மெய்ச்சகம்
சாதியரேபலகலையுமுணர்ந்து புவியில்லாத் தவமேசெய்யும்
போதியரேபத்தியில்லாநானும்புலையனாதலினேன் புண்ணியமூர்த்தி
ஆதிருநடிசிதம்பரத்தைக்காணவென்றே யாசைகொண்டேனனுப்புவீரே.

கீர்த்தனம்-இராகம்-காமக்கிரியை-ரூபகதாளம்.

பல்லவி.

தில்லைச்சிதம்பரத்தைப்பொருளாகிலுக்
தெரிசித்துவாவென்றுத்தாரந்தாருமையே

அனுபல்லவி.

தில்லைச்சிதம்பரத்தைக்கண்டாற்பிறவியினி
இல்லையென்றுபெரியோர்சொல்லக்கேட்டிருக்கிறேன் (தில்லை)
அல்லலறுக்குந்திருவம்பலநாயகன்
அல்லும்பகலுமானமோனக்கமபெருகிய (தில்லை)
ஆதிமுதலாமென்னையடிமைகொண்டதல்லவோ
சேக்குலமெயுகதன்பினில்தயவுசெய்யு (தில்லை)

கீர்த்தனம்-இ-ம்,காமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

தெரிசிக்கவேணுந்-சிதம்பரத்தைத்-தெரிசிக்கவேணும்

அனுபல்லவி.

தெரிசித்தவுடனுடல் கரிசைப்பிணிகளறும்
பரிசுத்தமாகுமுன் மறுசுத்தமாகவே. (தெரிசிக்க)

சரணங்கள்.

பக்தர்பணியுங்கிருக்கூத்தன்சந்நிதிதொழு
தேத்திப்பிறவிதுய ராற்றியெப்போதும (தெரிசிக்க)
வேதனையடியவர் போதனைமுனிவர்கள்
காதலொகரங்குவித் தாரவாக (தெரிசிக்க)
நசனேபுலியூரில வாசனேகனகச
பேசனேயென்று நடராசனைப்போற்றி (தெரிசிக்க)
காமனையெரித்தவர் வாமத்தினின்றசிவ
நாமத்தைச்சொல்லியர்த்த சாமத்தில்வந்து (தெரிசிக்க)
ஞாலம்புகழுமவன் மாலைபணியுங்கோ
பாலகிருஷ்ணன்தொழுஞ் சிலம்பொற்பாதனைத் (தெரிசிக்க)

வசனம்.

நந்தனார் தரிசனஞ்செய்ய உத்தாரங்கேட்க அந்தணர் சொல்லுகிறார்.

எண்சீரடியாசிரியவிருத்தம்.

புத்திசொல்லிக்கேளாத மூடாவுந்தன்
புரட்டெல்லாமறிவேன் போடாபோடா
பத்தியென்றுஞ்சித்தியென்றும் பறையர்க்கேது
பாப்பாரதெய்வமது பலிக்காது
குற்றமுண்டுன்சாதியிலே வழக்கமில்லாக்
கொள்ளைபறைச்சேரியிலே கூடாதப்பா
பித்தமதுகொண்டவன்போ லிங்கேவந்து
பேசாதேபோபோவென் றேசுவானே.

கீர்த்தனம்-இ-ம், ஆசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரதெரிசனமா-மியதைச்-சிந்திக்கலாமாப்பறையா

அநுபல்லவி.

சிதம்பரதெரிசனஞ் சதுர்மறையோர்கள்
செய்வதுஞாயம் நீசொல்லுவதுமாயம்
சொல்லாதே இங்கே நில்லாதே
சேரிக்குப்போடா நாளைக்குவாடா (சிதம்பர)

சரணங்கள்.

சனகமகாமுனியோகிகள்தேடிய
கனகசபேசனைக்கண்டறிவாயோ
பேசாதே கை வீசாதே
வீரனைத்தொழுடா ஏழைஉழுடா (சிதம்பர)
தலமுறையோர்கள் தரிசிக்குமந்திரஞ்
சிவபதமென்றுசேவிக்கலாமா
ஆகாதுவினை போகாது
விரைதெளியன்றோ அறுதலிமகனே (சிதம்பர)

வசனம்.

உழுது சேறுபண்ணி பரம்படித்து விரைதெளித்து நாற்றுபறித்து நட்டுவைத்து மடைதிறந்து மடைகோலி களைபிடுங்கி காத்திருந்து பதத்தில் அறுத்து கட்டியடித்து நிறமிடப்பட்டதைக் காப்பதுமில்லை இராக்காலங்களில் பக்கம்பிடித்து தடியெடுத்து கொம்புகம்பட்டமுழக்கி கோலாகலமாகி நாலுபறையடியோடுக்கூடி லாப்பைவிட்டு ஊளைசகர்த்திவந்து காக்கும்படி கிராமத்தாரிட்ட காவல் காப்பதுமில்லை உனக்கு வேண்டிய ஊணுறக்கமுதலாகிய தேசகருமமறந்து எப்போதும் தில்லையம்பலம் திருச்சிற்றம்பலம் சிதம்பரமென்று பித்துபிடித்துத் தாயைவிட்டகுழந்தைபோல் வாயைவிட்டலறி பேய்பிடித்தவன்போல் மதிமயங்கி உடல்கலங்கி எல்லோரும்பழிக்கக் கீழேபுரண்டழுது தத்தப்பித்தென்றுதள்ளாடிய காரணமென்னவென்று அந்தணர் நந்தனைக்கேட்கிறார்.

கீர்த்தனம்-இ-ம் சூரியகாந்தம்-ஆதிதாளம்.

பல்லவி.

நந்தாவுனக்கிந்தபிரமைவந்தகாரணம் நானறிந்திடச்சொல்லும்

அநுபல்லவி.

அந்தரங்கமுள்ள சொந்தப்பறையனு
வந்திருப்பதுபோல் சண்டைப்பிடிக்கவந்தாய் (நந்தா)

சரணங்கள்.

சாதிமுறைமை தாறங்காய்-தில்லைச்
 சபாபதியைநினைந்தாய்
சூதுக்காரப்பறையருடன்கூடிச்
 சும்மாவிருப்பது எம்மாத்திரம்காண் (நந்தா)
குலத்திலில்லாதவொழுக்கம்-நீயதைக்
 கொண்டாடுறதுமுழக்கம்
வெளுத்ததிறுநென்ன எருமைச்சாணியது
 மேனியிலணிவதோ வையகந்தன்னிலே (நந்தா)
திருட்டுப்புரட்டுமறியாய்-பொல்லாத்
 தீங்குவார்த்தையுரையாய்
முரட்டுத்தனத்தையென்முன்னேகாட்டி.
 விரட்டிப்பேசுறாய் வெறிமயக்கமோ அடா (நந்தா)

வசனம்.

வேதியர் நந்தனைப்பார்த்துச் சிதம்பரமிரமை வந்தகாரணமென்னவென்றுகேட்க பின் நந்தனார் வேதியருக்குச்சொல்லுவார்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மனங்கண்டவிடமெல்லாம்போகாமலாணையிட்டு மறித்துவாங்கி
இனங்கண்டமெழுகதுபோலேனதுள்ளந்தானாக உருக்கிச்சாய்க்கும்
புனல்கொண்டமேனியனைப்புண்ணியனைப்புராந்தகனைப் போற்றிசெய்ய
மனங்கொண்டதில்லைக்குப்போய்வருவேன் கருணைவழிகாட்டுவீரே.

வசனம்.

நந்தனார் வேதியனைப்பார்த்து உத்தாரங்கேட்க அந்தணர் சொல்லுதல்.

கீர்த்தனம்-இ-ம். நாதநாமக்கிரியை-ரூபகதாளம்.

பல்லவி.

கட்டகடவுளையும்பட்டவெளியைத்தொட்டபோதிலும் (கட்ட)
கெட்டமதியைவிட்டுவிடுகேனடாபண்ணையாளடா (கட்ட)
மிட்டநெருங்கும்புண்ணையுண்கால்பட்ட இறுல்பசுமைகொள்ளும் (கட்ட)

விருத்தம்.

கதிரொருமுழமேனீளும் கட்டமுக்கலமேகாணுங்
துதிபெறுகந்தாவுன்கைதொட்டதேதங்கமாகும்
பதிதனிற்பெருமைசொல்லும் பறையனுயிருந்ததில்லைச்
சிதம்பரப்பித்தேன்கொண்டாய் செய்தொழிலேதென்றாரே.

வசனம்.

நந்தனாருக்குச் செம்பரப்பித்தந் தெளியாமையால் . வேதியனென்னசெய்யப்போறேனென்று துயரூற்று நந்தனாரைப்பார்த்துப் புலம்புவார்.

கீர்த்தனம்-இ-ம், தனுகசரி-ஆதிதாளம்.

பல்லவி.

பித்தனாய்ப்போனதென்ன நந்தா (பித்தனாய்)

அநுபல்லவி.

எத்தனையோபுத்திக ளெடுத்துப்படித்தும் (பித்தனாய்)

சரணங்கள்.

இத்தனைப்படி செய்தனாரோ
பற்றுதலில்லாமலே பண்ணியபோனாரோ
பத்தியென்றுமே கிட்டனாரோ
நித்தமுமிப்படியே நிலையிட்டனாரோ (பித்தனாய்)
எத்திசையும்புகழ் பெற்றிருந்தும்
வித்தைகளனேகம் விளம்பத்தெரிந்தும்
பத்தியோசாலை மதிக்கும்
கத்தனென்றுபேரிட்டு நானுனக்கிருக்கும் (பித்தனாய்)

வசனம்.

மனதிற்றுயரூற்ற வேதியனை நந்தனார் மிகவும் வணங்கிச்சொல்லுவார்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பித்தமதுதெளிக்குவிடமருந்துண்டுதில்லைவனம்பேணிச்சென்று
சத்திசிவகாமிப்பெண்சந்நிதியில்கோபுரத்தலைவணங்கி
நித்தியனைநடனமிடுந்திருக்கோலங்கண்ணுளிரத்தெரிசித்தாலல்
பித்தமறுதெளிந்துவிடும்வேதாந்தமறைசொரியும்பெரியகோவே.

கீர்த்தனம்-இ-ம், செங்கலா-ரூபகதாளம்.

பல்லவி.

பித்தந்தெளியமருந்தொன்றிருக்குது பேரின்பமன்றுள்ளே

அநுபல்லவி.

மற்றமருந்துகள் தின்றாலுமுன்னாக்குவல்லேவல்லேவக்கேஐயே அடு

சரணங்கள்.

பாம்பும்புலியுமெய்ப்பாடுபட்டுத்தேடிப்பார்த்துப்பயிரிட்டது - அந்தப்
பாரனந்ததிருமாலும்வேதனும்பார்த்துக்களித்ததாண்டு

மார்ப்பதியென்றெருசீமாட்டியதில்பாதியைத்தின்றதுண்டு - இன்னம்
பாதியிருக்குப் பறையாசியும்போய்ப் பாசென்றுத்தாரந்தாரும தாரும்

பித்தன்

பத்துத்திசையும் பாவிப்பட்டாங்காலும் பார்த்துப்பிடிபாரே
தத்திக்குதிக்குந்தாளங்கள்போடுந் தண்டைச்சிலம்புகொஞ்சும
தித்திக்குந்தேனே செங்கரும்போகல்ல சித்தமுடையார்க்கே-என்
சித்தத்தைக்கட்டியிழுக்குதுஅங்கே சென்றால்போதுங்கவலைபோய்த்திருமை

பித்தன் பே

னைச்சொன்னதுபயிப்பாவந்தொலையுமூழ்வினைகளுமற்றடங்கும்
பேரைக்கொண்டாடிப்புலம்புகிறார்வெகுபேர்களுக்குப்பிழைப்பு
சாருகனையுந்தீருமருந்துசாதியைப்பாராது-இன்னம்
தீராதநோய்கள்படைத்தவெல்லாருந்தீருந்திருவைபே (பித்தன்)

கீர்த்தனம்-இ-ம், செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரம்போகாம விருப்பேனோ
சென்மத்தைவீணுக்குக் கொடுப்பேனோ (சிதம்பர)
பக்தியுணர்வும் பொருந்தினதங்கே
சத்தியஞ்சொன்னேன் சடலமாமிங்கே (சிதம்பர)
ஆசையுநேசமும் மாலைநமனங்கே
பேசலும்பாசமும் பிறமாலையிங்கே (சிதம்பர)

வசனம்.

இப்படி நந்தனார்சொல்ல வேதியர் மூர்ச்சையடைந்து விழுந்ததெ
ளிந்து எழுந்துசொல்லுவார்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

காற்பதுவேலிபூமி கடவுகட்டாகவில்லை
பார்ப்பதுமில்லைசைவப் பழமதுதின்றாய்பண்ணை
சார்ப்பதுமில்லைபுன்னைக் கைவிடமனதுவல்லை
சேர்ப்பதாலாவதில்லைச் சேரியிற்றொலைந்துபோடா.

வசனம்.

என்றுவேதியன் சொல்லிய உத்தரப்படி சேரியில் நந்தனார்வந்து
பண்ணிரண்டுபேர்களைப் பார்த்துச்சொல்லுவார்.

பியாகை-இ-ம்,மாஞ்சை-ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஆசைசோருந்தோழரே கேளுங்கள்
பெருஞ்செல்வங்களுண்டோ சாணக்காலமத்து (ஆசை)

ஆயன்மாயன் அன்றடிமுடி காணுகை
வேயனழலுருவாய்நின்றநின்மலனல்லாள் (ஆசை)
மண்ணைப் விண்ணைய் மற்றுளபொருள்களாதி
எண்ணுமென்றுன்னவொண்ணப்போலிருக்குமீசனல்லால் (ஆசை)
அருவா யுருவா யண்டபகிரண்டமெங்கும்
பரமாயுநின்றதேகாந்தப்பராபரத்தையல்லால் (ஆசை)

வசனம்.

என்று நந்தனார்சொல்லிப் பின்னும் ஆநந்தக்கூத்தாடுவார்.

தரு-இ-ம்,தங்கியாசி-திரிபுடைதாளம்.

பல்லவி.

ஆனந்தக்கூத்தாடினார் ஆனந்தநந்தன்
ஆனந்தக்கூத்தாடினார்

அநுபல்லவி

வானுந்துதேவர்முனிவர்ஜயஜயவென்று
வாழ்த்தும்பிரானடிகள் வாய்ப்பதெப்போதோவென்று (ஆநந்த)

சரணங்கள்.

மாயவலைக்குட் பட்டு-அறிவெப்போதும்
மானாத்துயரப் பட்டு
மாயுமூன்றைவென்று வலியவாண்டருண்மூர்த்தி
நாயேன்களிக்கவென்றன் நாடிவரெவ்நேசாந்தி (ஆநந்)
கவலைப்படாதே நெஞ்சமே-காலன்கைப்பாசன்
கணைமுனைவாராதே அஞ்சமே
தலைவிலையுரைத்த சனமாரக்காதமக்கன்று
தற்பதத்தைக்காட்டினேன் தனைக்காணுவேனென்று (ஆநந்)
காயமிகவுந் சதமா-அன்றியுற்பவந்
காணபதோவ்வொரு விதமா
ஆயுமெழுபிறப்பா யவதரித்தலுண்டென்றும்
ஞாயபதத்தாலந்தத் தகளற்றிருப்பேனென்றும் (ஆநந்)

வசனம்.

இவ்விதமாகப் பன்னிரண்டுபேர்களையும் வேலைசெய்யவொட்டாமல் தன்சமீபத்தில நிற்கவைத்துக்கொண்டு போதித்திருப்பதை வேதியன்கேள்வியுற்று கர்த்தருனைச்சீறிக் கடுங்கோபஞ்செய்து நந்தனார் வேதியருக்கு இதுவுசொல்லுகிறார்.

தரு-ஸ்ரீராகம்-ஆதிதாளம்.
பல்லவி.

எனக்கென்மீது இத்தனைபேதகம்
எண்ணுவதேனோ தோதகம்

அநுபல்லவி.

காதகராம்மணக்கசடர்சொன்ன சொல்லே
சாதனைசெய்துசாதித்திர்பிழைப்பொன் றில்லை (ஏதுக்)

சரணங்கள்.

நான்உனக்குப் பண்டு-சாதனஞ்செய்து
நலமாய்த்தந்த தாண்டு
தோன்றலேனீசொல்லுஞ்சொற்படிச் செய்கிறேன்
பான்மையாகநித்தம்பத்தியாய் உய்கிறேன் (ஏதுக்)
காசளவு நன்மை-செய்தோரைஒருக்
காலும்மறவாத் தன்மை
ஈசனுக்கெட்டாதாமன்றிதாமே கண்டு
யோகிக்கப்போகிறீர் இனிமேல்நான்செய்தொண்டு (ஏதுக்)
ஏழைநான் தானே-ருதாவாதும
வந்தொன்றறி யேனே
வேதியட்டனேயொருமேதிகாலோக ளங்கே
வேழியனுக்கும்உழுகவிறங்கொடுப்பி ரிங்கே (ஏதுக்)

---

நந்தனாருழுதல்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

வணக்கமாய்ச்சொல்லும் வார்த்தையையுணர்ந்து
வஞ்சனையிலாதவேதியன்றன்
கணக்கிலாத்தனதுபண்ணையாள்வசத்திற்
கைப்பிடியாகவேவந்து
பிணக்கிலானிவனசொற்படியெலாஞ்செய்வான்
பின்னிட்டான்அழைத்துப்போவென்ன
இணக்கமாய்க்கொண்டுபோயினர்நந்தன்
ஏர்தொழில்விசப்புரிந்தனனே.

தரு-இ-ம்சஹானு-ரூபகசாப்புதாளம்.

பல்லவி.

பத்தியாகஆண்டைசொற்படிசெய்தானந்தன்பளருடன்மிகப் (பத்தி)

அநுபல்லவி.

கர்த்தனைச்சித்தங்களித்துக் கதித்தவன்
கமலபாதத்தை நாடி-மெத்தக்
காதலாகவேகொண் டாடி
மனம் நீடி (பத்தி)

சரணங்கள்.

சீருள்ளஆதனூர்க்குக்கை — புன்சைகளோ
வித்தமுமோட்டுக்கொண்டு — பழுது-அறச்
சுத்தமதாகவே — உழுது
காலே — பொருதுது (பத்தி)

கருப்புவெள்ளைப்புச்சிவப்பு — திறமுள்ளக்
காளைகளைகட்டிப் — பூட்டி-பொற்
காறுவெளன்றதிலே — மாட்டி
ஏ — ரோட்டி (பத்தி)

கத்தன்கறுப்பன்கடப்ப — ஊசிம்பனை
கரியனனைதமழ — பெரியன்-சின்னக்
காத்தனவன்கன் — சொரியன்
குள்ள — கரியன (பத்தி)

சீரகச்சம்பாஇறுக்கருடன் — சம்பா
சிறந்தபனைக்கத்தை — கட்டு-சம்பு
சோத்துவளாயு — மிட்டு
பயி — ரிட்டு (பத்தி)

வசனம்.

இவ்விதமாய்ப் பயிர்தொழில் புரிந்துக்கொண்டிருந்து நந்தனார் இனிமே மேல் சிதம்பரம்போவேன் போகாவிடில் பிராணனை விடுவேன் அன்றி யும் சேரியிலிருக்கமாட்டேனென்று சொல்லிக்கொண்டு வேதியர்பால்செ ன்று தலைவணங்கிக் கரங்குவித்து மனங்குழைந்துக்கொண்டுச் சிதம்பரம் போக உத்தாரங்கேட்கிறார்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பொய்ச்சடலமபுழுக்கூடென்பதை வாசத்தோர் பைசையப்போக்கி செய்யும், ஆசைவின்மையென்றென்னளிக் தன்னாமம்மொழியைத் தொல்ல வேணும், பன்னாமிருத்தொடியழுகி ஊசைபிடிப்பயன் பாதகரெனு இச்சையிருந்திருக்குதையே அம்பலத்தைக்கண்டு களித்திறைஞ்சு வே ணா.

தரு-இராகம்-சாவேரி-ரூபகதாளம்.

பல்லவி.

பொன்னம்பலவாணனடிதொழுவோ-ராருவாண்டிப்
பிறவிக்கடலினைவிடக்கழுவார்

அனுபல்லவி.

இன்னம்பலதெய்வங்களிருக்குமென்கினவர்
போலவேபிறவிதவிலலுவோமுழுவிடத்திலேநிருத்தருள்செய்திடும் (பொ)

வேதமொருநான்குமறியாதபழம்பொருளாகினும்
வேண்டுபதஞ்சலிக்காகவேதில்லைப்பதிவந்து
பாதச்சிலம்பசையமணிகுலுங்கப்பிறையிலகக
பணிபடமாடவேசடையாடவேபரமானந்தக்கூத்தாடிய(பொ)

உலகந்தனில்சுகனமதுபோலெங்கினும்பரிபூரண
முருவற்றதுமருவற்றதுகுறையற்றிடுஞ்செல்வங்
கலியற்றவர்மதமற்றவர்விடையத்தினிலுருவற்றிட
கலைகற்றவர்வலயக்கவரிதயத்தினில்நடமாடிய (பொன்

இரவுபகல்கருமங்களிழுக்கும்பொறிகரணங்களதை
இருத்துவசப்படுத்தும்வகையெனக்குத்தெரியாது
பரவிவரும்ராககாதிந்சரணடுங்கிமனதொடுங்கிவழி
பார்க்குமிடமார்க்குமரிதாக்கும்பாலகிருஷணன்தொழும்(பொ

வசனம்.

இவ்வகையாய்ச்சொல்லும்நந்தனரைப்பார்த்து வேதியர் சொல்லுகிறார்.

சுலோகம்,

மெள்ளப்பேசிமெழுகிறாயனுதினமூடாவுனக்கித்தனை
கள்ளக்குமடிடலாவதென்னபலனோகாட்டேப்பசாசல்லவோ
துள்ளித்துள்ளித்துடிக்கிறாய்சிவபதஞ்செல்லாதுன்சாதியிலே
என்னுக்கொல்லையில்மாடுவர்துதொடராதேகும்படிச்செல்வ- -

வசனம்.

இப்படிசொல்லியவேதியருடனே நந்தனார் தனக்குத்தெரிந்தவித்தைகளை அத்தருணத்தில் சொல்லிக்காட்டுவார்.

முன்நந்தனார் பின்வேதியர் இருவருமாகச் சொல்லிக்கொள்ளும்
எட்டிக்குப்போட்டியான இருச்சொல்லலங்காரம்

நந்தனார்-இல்லையப்பார்க்கவல்லவோ வென்றார்
வேதியர்-கொல்லையில்முளைகாயில்லையோ வென்றார்
நந்தனார்-கள்ளம்போனதுள்ளதாகாது மென்றார்
வேதியர்-வெள்ளைமேபோனதுள்ளதுவிளையு மென்றார்

நந்தனார்-திருச்சிற்றம்பலங்கண்டால்தேகங்களிக்கு மென்றார்
வேதியர்-பொரிச்சகறிகொண்டால்தேகம்மெருக்கு மென்றார்
நந்தனார்-அரகராவென்றால்பாவம்போ மென்றார்
வேதியர்-பறையனைக்கண்டால்பாவமா மென்றார்
நந்தனார்-வெட்டவெளியிலேமனமுட்டிப்பாரு மென்றார்
வேதியர்-பொட்டவெளியிலேகுழிவெட்டிப்பாரு மென்றார்
நந்தனார்-எனக்குஉரியஞானமாரியையமதி யென்றார்
வேதியர்-உனக்குரியபறையர்சேரியேகதி யென்றார்
நந்தனார்-கர்த்தாவேயென்னுள்ளம்பெற்று மென்றார்
வேதியர்-கற்றாழையக்கினியில்பற்று தென்றார்
நந்தனார்-மறையோருக்கெப்போதும்வாயிலேதற்க மென்றார்
வேதியர்-பறையருக்கெப்போதும்சேரியேசொர்க்க மென்றார்
நந்தனார்-கொள்ளித்தேளபோலென்னைக்கொட்டாதே யென்றார்
வேதியர்-அள்ளித்தந்தேனென்னைத்திட்டாதே யென்றார்.
நந்தனார்-கடுமையாய்வந்துகவலைப்படுத் துவதேன்
வேதியர்-அடிமையாய்வந்துஅவலப்படுத் துவதேன்
நந்தனார்-இல்லையோவுன்னைச்சேரேனோ வென்றார்
வேதியர்-எல்லையோடுமுன்னைப்பாரேனோ வென்றார்
நந்தனார்-திருவாதிரைவருகுதுபோவேனே யென்றார்
வேதியர்-மறவாதிருப்பறையாபோகாதே யென்றார்
நந்தனார்-தெரியாதேமெள்ளப்போவேனே யென்றார்
வேதியர்-மரியாதையல்லபோகாதே யென்றார்
நந்தனார்-ஆனையைவிட்டுவழிகாட்டும்பெரியோரே யென்றார்
வேதியர்-பிராணியைவெட்டும்பழிகாட்டும்புலையரே யென்றார்
நந்தனார்-ஆடிப்பாடிப்படிப்பே னென்றார்
வேதியர்-தேடித்தேடிப்பிடிப்பே னென்றார்
நந்தனார்-இல்லையிலேகலககாமங்காடுவே னென்றார்
வேதியர்-கொல்லையிலேவிலங்காகப்போடுவே னென்றார்
நந்தனார்-இங்கேதெரிந்துதவிப்பேனோ வென்றார்
வேதியர்-வந்தவந்துஅலப்பாதே யென்றார்
நந்தனார்-நெஞ்சிலுங்கெஞ்சமுருகாதோ வென்றார்
வேதியர்-அஞ்சினுப்பஞ்சம்வருகாதோ வென்றார்

நந்தனார்-சிதம்பரம்போகஉத்தாரந்தாரு மென்றார்
வேதியர்-இதம்பெறலாமோசத்தாலேபோது மென்றார்
நந்தனார்-சீக்கிரமாய்ப்போறே னென்றார்
வேதியர்-போக்கிரியாய்ப்போவா யென்றார்
நந்தனார்-அக்கீதஞ்செய்யே னென்றார்
வேதியர்-சொன்னதுதவமோ னென்றார்
நந்தனார்-எங்களசாதிக்குள்ளவழி யென்றார்
வேதியர்-உங்களசாதிக்குஇந்தவழி யென்றார்
நந்தனார்-உற்றதுஒது மென்றார்
வேதியர்-பெற்றதுபோது மென்றார்
நந்தனார்-பறையனாய்ப்பிறந்ததென் தலையெழுத்தினது வென்றார்
வேதியர்-மறையராய்ப்பிறந்தோங்கள்வருந்தமது வென்றார்
நந்தனார்-வாய்க்காதவனைக்குவழிசொல்லு வீரோ
வேதியர்-காய்க்காதமரத்தில்கல்லெறி யாரோ
நந்தனார்-எப்போதுமிப்படிச்செய்வதே னென்றார்
வேதியர்-அப்போதுமிப்படிசசெய்ததே னென்றார்
நந்தனார்-உலகமெனைத்துங்கட்டுவளாயிறைந்த தேன்
வேதியர்-பலகலைகற்றும்பறையனாய்ப்பிறந்த தேன்
நந்தனார்-பழுதானசென்மம்படைத்ததோ வென்றார்
வேதியர்-அழுதாலுங்கன்மமடிக்காதோ வென்றார்
நந்தனார்-காப்பதுன்பாரங்கட்டிவிடு மென்றார்
வேதியர்-நாத்ததுவேலியைகட்டிவிடு மென்றார்
நந்தனார்-அப்பன்கருணையிப்படியோ வென்றார்
வேதியர்-தப்பினேனதுவுமொப்பிலே னென்றார்.

(வசனம்) அப்போதுநந்தனார் மெத்தவும் ஜபமாவணங்கிஉத்தாரங்கேட்கிறார்,

விருத்தம்.

அல்லிலுக்குழலாள்மோகமணைடார்துவொருக்காற்றெழுண்டா
பல்லுழிகாலஞ்செய்தபழவினைத்தொடக்கறுத்துச்
சொல்லரியடக்கொணுதசசுகக்கடலாட்டிவைககுந
தில்லைநாயகனைக்கண்டுதெரிசனஞ்செய்வேனென்றார்

கீர்த்தனம்-இ-ம்-கணஸி-மொரு-ஆதிதாளம்.

மார்கழிமாதத்திருவாதிரைநாள வரப்போகுதையே
மனதைப்புண்ணாக்கபண்ணுமலோருக்கமபோய்வா வென்றுசொலேயே

கட்டையிருக்கையிலே சிதம்பரம்போயே காணவேணுமையே
கட்டறுதியுமாசைவிளையுதன் காலுக்குக்குமிடையே
காளிங்கமுனைதநாளுமுதலாயுமக் கடுமைக்காரனையே
காலபாசத்தில்காட்டிக்கொடாமல் காப்பாற்றிடுமையே
உள்ளங்காலில்வெள்ளெலும்பாட வோடியுழைத்தேனையே
உண்டதுமுற்றமிலைநன்றியில்லேதே யொன்றுங்காணேனையே
எட்டுப்பிரணப்புமறியாதபேதை யெளியேனையே
இன்னந்தாய்வயிற்றினிடைநுழுகாமல் விட்டுக்காட்டிடுமையே
வெள்ளைவெருத்திமிர்தன்னர்குடிச்சிடும் வெற்றியேனையே
மேதினியினில்சாயினுக்கடையேன் வழிவிட்டேவேணுமையே
தானதவங்களொன்றுங்காணே தடியேனையே
தளரவிடவேண்டாமொருகோடி தருமமுண்டையே
அலனுமபகனுங்களாதாவாலே ஆளாகினேனையே
அன்புடனெனக்கல்லகதிபெறுவாரென் றணைப்பவேணுமையே

விருத்தம்,

சிலைபணிக்கதிடுமலேவெளிப்பிட்டச்செய்திடுந்திருமேனியைக்
கலைக்கொளச்சிடவேண்டிக்காதலைக்கண்டிலராயகிலமதனைத்
தங்சுமாதிமிழ்ந்தேடறுத்தன்னமக்கொருமகத்தனுனா
விலைக்குவாங்கியபெருமையாபேவன்வேனாதெல்லாம்பேசுவன்

வசனம்.

இப்படிச்சமயபாரமபோக உத்தரக்கேட்ட நந்தனுருடைய சிவபத்திபரிதாபத்தை ஆதிசேடனுதுஞ்சொல்லமுடியாதென்றுகடமுடிகொண்டமகானுபாவனை தனக்கடிமைக்காரனென்று வேணபடிபேசலார்,

கீர்த்தனம்-இ-ம-முகாரி-ஆதிதாளம்,

மாடுதின்னும்புலையாஉனக்குமார்கழித்திருநாளா
தேடியெடுத்தாயாசிடத்தேதபோம்பண்டாதேபோடா
ஆடுதின்னும்புலையாஉனக்குஆனிதிருமஞ்சனமோ
காடுபிரிக்கும்பாக்கைக்கன்னெருநாட்டாதேபோடா
கண்டுக்குப்பிணமழனோசரிக்குச்சன்னராத்தி
பண்டிக்குப்பூசைதிருகாருணைபோடபறையாபோடா
பூசைசெய்வாரோஆண்டவன்பொன்னடிதொழுவாரோ
கூசலேபோடாதேபோடாதேவரைக்குரலிடலாகாதே
கல்கையிலேகொண்டோமோஆக்கோணிப்பைகடோடுவையோ
இந்திரமதிவேணுதக்கதவர்புதிதிறப்பாதேபோடா

அஞ்செழுத்தோதானவோ உனக்குமானத்திருக்கதோ
வருசகலார்களைதாளைக்குத்தெரியும் வாராதேபோடா

வசனம்.

அடடா நந்தா சபாநாயகன்றாயிருக்கின்றது நீ சிதம்பரம் போகவேண்டுமென்றுகேட்பதை ஆலோசித்தால் மிகுந்த ஆச்சரியமாயிருக்கின்றதென்று வேதியர்பின்னுஞ்சொல்லுகிறார்,

தரு-௩-ம்-மோகனம்- ஆதிதாளம்

பல்லவி.

அடடா நந்தனே தில்லைக்கனுப்புமென்றெனைக்கேட்ப
தாச்சரியம்-மிக-வாச்சரியம்

அநுபல்லவி-

அடடா கட்டிக்கதைக ளைத்துமிக்குதவாது
கட்டாயமிலைத்தேடி கட்டுடவிப்போது (அட)

சரணங்கள்-

சனசாதியிற்பிறந் தோனுனக்கிடத்தி
லென்னவுளது னுண்டு-அல்லவென்று
போனபோதிலுமவா யிரவிருக்கும்வீதி
புகுந்துகீகடந்து கொண்டு
மானமறுத்துனிச மாலையணிந்தவரு
மாற்றலர்திரிபுர மதனைஎரித்தபெரு
மானுமகியநூர்த்திரு மருசிற்றம்பலத்திரு
வாயிலைப்பலமிபெற மாட்டாய்சேர்ந்தமெய்யிரு (அட)

வேளாளர்களொருபுரம் வேதியர்களிருந்தும்
மேன்மைகளிருக்க தனுறவ்-அந்தத்
தாழ்மையிலாதநிப்பக் தலைப்போய்ஒருவகாருத்
தடையில்லையோவப் பொருந்தும்
தன்மையிதெல்லாமனை மாசறுநடையாகும்
ஜாதிபிறிதியைபோசித் தாலேயேசியவருமா
பள்ளிப்பள்ளிப்படித்தேன் பரவாற்றுமேவருமா
பட்டாசலிசரியும்பறையனுக் கெய்ப்பறுமேபாக்யமுமா (அட)

அல்லும்பகலும்சோ றளித்துக்காத்திடுந்தெய்வ
 மானவம்பல வாணன்-இக்கிருக்கு
சொல்லைப்படவேவேண்டாமென்றுரைத்திட்டவென்
 சொல்மறந்தநீ வீணன்

தில்லைக்கியாவரப்பேச் சேதுக்கடாபிடித்
 திருக்குமெனதுபிடி இரும்பாதடாபகடி
பல்லையொடித்துவிடு கிறேன்பாரடாதகடி
பஞ்சைநீயாசமர்த்தும் பாய்ப்போனேடடாதடி (அ)

வசனம்.

வேதியர்சொற்களைக்கேட்டநந்தனார் நீங்களென்னைத் தடியாலடித்தாலும்பிராணனைமுடித்தாலும் கழுத்தையொடித்தாலும்சிதம்பரத்தில்நடித்தானைக்காணுமலிருக்கேனென்றுதடுத்துச்சொல்லவேதியருக்குக்கோபம்பிறந்துசொல்லுவார்.

தரு-இ-ம-சுருட்டி-ஆதிதாளம்,

பல்லவி,

இனியுன்குற்றத்தைப்பொறுப்பேனோ-அனுலவை
 வேணுஞ்சம்மதிப் பேனோ

அனுபல்லவி

தனிபரம்வேதசாஸ்திரங் களையுணர்ந்தவனுஞ்சாதி
தன்புத்திபோகாதென்ற சரித்திரமபொய்யல்லநீதி (இனி)

சரணங்கள்,

பலகாலமும்பழமும் பாலூட்டிவளர்ப்பாம்பு
 பழகாதகற்குவொப்பாய்ப் பகரலாருமேவேம்பு
தலம்விட்டப்புறம்போய்நீ தான்செய்யாதடாவீம்பு
 கழையிற்கறந்தபாலுக் காவுபோமூலக்கசம்பு (இனி)

இடையிலிருக்குமிந்த இடும்பங்கடப்பஞ்சரி
 இவர்களல்லாமலிந்நா இருப்போர்களசிறுநரி
கடையிலிருப்போன்மறை நல்லவனுருக்கெரி
 நானுனைச்சேர்ப்பெனென்று நம்பாதேபரிகரி (இனி)

வசனம்.

என்றுசொல்லியவேதியருக்கு நந்தனார்யிருக்குந் தாழ்மையோடு மேற்மையோடுஞ்சொல்லவேதியருக்குக் கோபம்வந்துதிருட்டுவேடங்கொண்டமுரட்டுப்பயலேயென்றுமறுபடியுஞ்சொல்லுகின்றார்.

கீர்த்தனம்-இ-ம-தனாசரி-ஆதிதாளம்

பல்லவி.

திருட்டுத்தனமாத்திரமவேண்டாம-நந்தா-அடாவுனக்கு
திருட்டுத்தனமாத்திரமவேண்டாம-நந்தா

அநுபல்லவி.

முரட்டுத்தனமாய்ப்பே சாதேகிர்மூடா
முன்னுமபின்னுமறி யாக்குடிகேடா
வரட்டுத்தவனைபோல்வா யாடாதேயடா
வயலேமுழுதிலுஞ்சீர் படுத்திடப்போடா - திருட்

சரணங்கள்.

புத்தியுள்ளவனாகப் பாரு-ஏர்கொண்டுழுது
புன்செய்நிலமுழுதுஞ் சீரு-செய்துவிதைத்து
வைத்திடுவமபோற்குடி யாரு-இருபயார்களுடன்
னைத்துதிப்பார்சகல பேரும
சத்தியமாகக்குண் டைகளைநீகூட்டி
சார்ந்ததற்குவர வாரகீர்ஜாட்டி
சத்தியுள்ளமட் டுக்குமேரோட்டி
தக்கவுன்றன்றிற மதுமிகக்காட்டி
மற்றுமற்றனைத் தனைத்துமுடிவுற
மெத்தமெத்தசித்த மொத்துசெயகுவாய் - திருட்

பட்டாளுனக்கேதடா பாவி-என்சொந்தமான
பழனங்களுமீட்டேறக் தேவி-பூசைபுரிந்து
பொட்டெனப்யகம்பணித்து சேவி-இதைமறந்தால்
போகநுவேனேயுன்னிட ஆவி
சட்டமாகவுன் சமர்த்தைதக்காட்டாதே
சரஸமென்றுகை ணிறைஓட்டாதே
தட்டுவேலைக மிஞ்சிகிட்டாதே
சலசலப்புக்கந்தகிரி யோடமாட்டாதே
விட்டுவிட்டுவிட்டு விட்டுவிடுவிடு
கெட்டுகெட்டுகெட்டு கெட்டுப்போகாதே - திருட்

பாயுஞ்சலமுழுதுங் கட்டி-பதனமாகப்
பழையபயிருவெடுத்துக் கொட்டி-சேறுபோலாட்டி
நோயுங்கடமுதலோ ரட்டி-வராமற்செய்வ
சொன்னாலனுப்புவேனே மட்டி
காயமுள்ளபோ தேதானடா
கர்த்தன்றன்னைக்கா ணப்போவானடா
எய்த்துவிட்டுப்போ கப்போறாயடா
யோத்ததிருவாதிரைக் கனுப்பேனோடா
நாயன்நாயன்நாயன் நாயன்சாட்சியாய்
நீயன்நீயன்நீயன் நீயன்உனைவிடேன்றிருப்

இதுவும்வேதியர்சொல்லுகிறார்

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வானிருந்தவிடந்தேடிக்காணாமல்மாதவத்தோர்மதிமயங்கத்
தேனிருந்தசெந்தாளைச்சிந்திப்பார்புந்தியுறத்தெளிந்தாரில்லை
ஊனுருந்தமபுலையாநீசிதம்பரத்தேசென்றாலுமுண்டோமுத்தி
தானிருந்தவிடம்விட்டுப்போகாமல்சஞ்சலத்தைத்தள்ளுவாயே.

வசனம்.

அடாவாடா மூடாகோடா என்னைப்போலொத்தபெரியவர்களா லேகூடத்தேடி அறியப்படாதஜெகதீசனுடைய திவ்வியநாமத்தைத் தையுரிஞ்சும்பறையா நீகத்திகருலைக்கலாமா இப்படித்திக்குதிக்கலா மாவித்தையொன்று மறியாதவனிக்கேட்டி எண்ணலாமா நத்திமுக் திதேடலாமா சுத்தமானபெரியோர்களிடத்தே சத்தம்போடலாமாஇ ங்கேநித்தம்நாடலாமாவியர்த்தமான இந்தசென்மமெடுத்துச்சித்திதே டலாமா அவகேபுத்திசொல்லலாமா அடா இதுவெல்லாம் விட்டுவிட டாநாதனைதப்பிதிங்கிசடடா என்தொழிலைத்தொடடா தோல்கட்டிய த டியையெடடா யாருக்கிருடாமலிருடாகளத்தில்படோகாவல்கொடடா புல்லறுடாமூடடா வழிதெரியாக்குருடா நான்சொல்வதுநேரடா இது டாஉன்செய்கையென்று கல்லாலெறிந்து தடியாலடித்துவாயால்திட்டி தேள்போலேகொட்டி இவனொருஆளபோலேநின்றான் அவர்நாள்போ குதேயென்றார்.

வசனம்,

நந்தனார்வேதியனைப்பார்த்துச்சொல்லுகின்றார் நீங்களென்னைய டிக்கலாம் நானும்அடிபடலாம் தங்களுக்குக்கை நோகுமென்றுசொல் லுவார்,

37

கீர்த்தனம்-இ-ம்-தண்டகம்-ஆதிதாளம்.

பல்லவி.

அடித்ததுபோதுமையே-என்னை அடித்ததுபோதுமையே

அடித்தாலுனகன்னகைவலி யாதோ
அடிமைவேலைசெய்யுமென்னுடன் வாதோ
படித்ததெல்லாமென்மனதிற் படாதோ
